


# மலையக மக்கள் என்போர் யார்?

இ. தம்பையா

# மலையக மக்கள் என்போர் யார்?

இ. தம்பையா

புதியபூமி வெளியீட்டகம்

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்

Malayaga Makkal Enpor Yar?
E. Thambiah
First Edition : July 1995
Printed at : Surya Achagam, Madras.
Published in association with
Puthiya Poomi Veliyeetagam
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane,
Madras - 600 002.
Rs. 18.00

Published and Distributed in Sri Lanka by
Tamil Publication and Distribution Network
44, 3rd Floor, C.C.S.M. Complex Colombo-II
Tp. 335844 Fax. 94 - 1 - 333279

மலையக மக்கள் என்போர் யார்?
இ. தம்பையா
முதற்பதிப்பு : ஜூலை 1995
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை-41
வெளியீடு : புதியபூமி வெளியீட்டகத்துடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தயார் சாகிப் 2-வது சந்து,
சென்னை - 600 002.
ரூ. 18.00



எனக்கு சமூக சிந்தனையை ஊட்டியவர்களில் ஒருவரான எனது அவ்வா (பாட்டி) திருமதி லக்ஷ்மி குண்ணன் தம்பையா அவர்களின் நினைவாக இந்நூல் சமர்ப்பணம் செய்யப்படுகிறது,

# உள்ளடக்கம்


பதிப்புரை

முன்னுரை

I அறிமுகம்

II மலையக தேசிய இன உணர்வின் தோற்றமும் வளர்ச்சியும்
(அ) பிரசாவுரிமைப் பறிப்பின் முன்பும் பின்பும்
(ஆ) கல்வி வளர்ச்சி
(இ) திட்டமிட்ட குடியேற்றம்
(ஈ) இனவன்முறைகளின் தாக்கம்

III மலையக மக்கள் என்போர் யார்?

IV மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம்

V மலையக மக்களும் சுயநிர்ணய உரிமையும்

VI மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் அரசியல் திசைமார்க்கமும்

VII மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் ஸ்தாபனங்களும்

# பதிப்புரை

இலங்கையில் வாழும் எல்லா சமூகங்களையும் விட மிகவும் பின் தங்கிய நிலைமையிலேயே மலையக மக்கள் வாழ்கின்றனர். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகளில் மலையக மக்களுடைய பிரச்சினைகள் பற்றியும், அவர்களின் அரசியல் மார்க்கம் தொடர்பாகவும் தெளிவான நிலைப்பாட்டினை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அதற்காக மலையகம் பற்றிய ஆய்வாளர்களும், மலையக மக்களின் மத்தியிலுள்ள அரசியல் வாதிகளும் நிறையவே பங்களிப்பு செய்ய முடியும். அந்த வகையில் மலையக மக்கள் மீதான பேரினவாத அடக்குமுறைகள் அவற்றுக்கு எதிரான அம் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் போன்றன பற்றி எடுத்துரைக்கும் கட்டுரைகளை மலையக மக்கள் என்போர் யார்? என்ற தலைப்பில் நூலாக வெளி வருவதில் புதியபூமி வெளியீட்டகம் மகிழ்ச்சியடைகிறது.

இந்நூலிலுள்ள கட்டுரைகளை புதிய — ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளரும் புதியபூமியின் ஆசிரியருமான சட்டத்தரணி இ. தம்பையா எழுதியுள்ளார். அவர் 1985 முதல் வீரகேசரியிலும் பின்னர் சரிநிகரிலும் எழுதிய சில கட்டுரைகளை இங்கு விரிவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அப்பத்திரிகைகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலினை புதியபூமி வெளியீட்டகத்துடன் இணைந்து வெளியிட்டு உதவுவதில் முன்நின்ற சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்திற்கு நாம் நன்றியுடையோம். இதனை அச்சிட்டு உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

*10—06—95*


புதியபூமி வெளியீட்டகம்
14, 57 வது ஒழுங்கை
கொழும்பு-06
இலங்கை

# முன்னுரை

இந்நூலிலுள்ள கட்டுரைகளில் சில வீரகேசரி, சரிநிகர் என்பவற்றில் வெளிவந்தன. அப்பத்திரிகைகளுக்கே உரிய விஷேட பிரச்சினைகள் காரணமாக அக்கட்டுரைகள் அப்பத்திரிகைகளில் முழுமையாக வெளிவரவில்லை. இந்நூலில் வெளியிடுவதற்காக அக்கட்டுரைகள் முழுமையாகவும் மேலும் விரிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

இந்நூலிள்ள கட்டுரைகளில் கூறப்படுகின்ற தகவல்களில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை யாரும் எவருக்கும் புதியனவல்ல. மலையக மக்கள் பற்றி இங்கு முழுமையான ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்று கூற முடியாது.

மலையக மக்களின் தேசிய இனப்பிரச்சினை பற்றியும் அவர்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. அவை பற்றி எல்லா அம்சங்களும் இங்கு அலசி ஆராயப்பட்டுள்ளன என்று என்னால் திருப்தியடை முடியாது,

மலையக மக்களின் தேசிய இனப்பிரச்சினை, சுயநிர்ணய உரிமை பற்றி ஒரு வித்தியாசமான, புதியதொரு அணுகுமுறையை கையாள முயற்சிப்பதன் விளைவே இக்கட்டுரைகளின் பிரசவம் என்றே என்னால் கூறமுடியும்.

மலையக ஸ்தாபனங்களின் தவறுகள், குறைபாடுகள் பற்றி ஆழமாக இங்கு விமர்சிப்பதை தேவை கருதி தவிர்த்துள்ளேன்.

மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் மலையகத்தின் சகல ஸ்தாபனங்களும் ஒருபொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டும் என்பதனால் அவைகள் பற்றிய விமர்சனங்களை தற்போதைக்கு நான் ஒதுக்கத்தில் வைக்கிறேன்.

நான் மாக்சிசத்தை எனது வாழ்வியல் கொள்கையாகவும், என்னை வழிநடத்தும் நிறுவனமாக புதிய—ஜனநாயக கட்சியையும் ஏற்றுக்கொண்டவன். அவற்றின் செல்வாக்கிற்குட்படாமல் என்னால் பேசவோ, எழுதவோ முடியாது. அப்படி செல்வாக்குட்படாமல் நான் பேசுவதாகவும், எழுதுவதாகவும் கூறினால் அது உண்மையாகவும் இருக்காது. நேர்மையாகவும் இருக்காது.

செல்வாக்கு என்பது தலையீடோ அல்லது திணிப்போ என்று அர்த்தமாகாது. திணிப்பு, தலையீடு, வற்புறுத்தல் இல்லாமல் பேசுவதும். எழுவதுமே சுதந்திரமாக பேசுவதும் எழுதுவதுமாகும். ஏற்றுக்கொண்ட கொள்கை நிறுவனம் என்பவற்றின் செல்வாக்கில்லாமல் வாழ்வதுதான் சுதந்திரமான வாழ்க்கை என்று யாராவது கூறினால் அது சரியுமாகாது. நேர்மையுமாகாது.

எனது எழுத்தும், பேச்சும் ஏறக்குறைய எனது கொள்கையாகவும் நடைமுறையாகவும்; எனது கொள்கையும் நடைமுறையும் ஏறக்குறைய எனது எழுத்தாகவும் பேச்சாகவும் இருக்கமுடியும். அந்த பேச்சும் எழுத்தும் சரியா பிழையா என்பதனை வரலாறு தீர்மானிக்கும். ஆனால் எனது எழுத்தும், பேச்சும் – கொள்கையும் நடைமுறையும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக பரிணாமம் அடைய முடியாததோ பரிணாமம் அடைய கூடாததோ அல்ல.

எனது கடந்த 20 வருடகால பொதுவாழ்க்கையின் ஈடுபாட்டால் மலையக மக்களின் அரசியல் பரிணாமத்தை சரியாக விளங்கிக் கொள்ள முயற்சிப்பதன் விளைவே இக்கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள எனது கருத்துக்களாகும்.

இக்கருத்துக்களை சரியாக தொகுத்து செழுமைப் படுத்த தேவையான பரீட்சார்த்தங்கள் அனைத்தையும் செய்யவும் அவற்றின் விளைவுகளுக்கு முகம் கொடுக்கவும் தயாராகவே இருக்கின்றேன். அந்தவகையில் எனக்கு உதவுவதற்கு இந்நூலை வாசிப்பவர்கள் தயக்கமின்றி விமர்சனங்களை முன்வைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

ஒரே விடயங்கள் எல்லா கட்டுரைகளிலும் திரும்பத் திரும்ப எழுதப்பட்டுள்ளன. அக்கட்டுரைகள் தனித்தனியாக எழுதப்பட்டதனாலும் விளக்கமாக இருக்க வேண்டும் என்பதனாலும் அந்த விடயங்கள் அப்படியே விடப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகளை நூலாக வெளியிட முன்வந்த புதியபூமி வெளியீட்டகத்திற்கு எனது நன்றிகள்

கொழும்பு

*10-06-1995*

**இ. தம்பையா**
இலங்கை

# I

# அறிமுகம்

1948ஆம் ஆண்டிற்கு முன்னரோ பின்னரோ இலங்கையில் அரசியல் தலைவர்களாக வெளிப்பட்டவர்கள் யாவரும் இலங்கையின் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவே இருந்தார்கள்; இருந்து வருகின்றனர். அவர்கள் யாவரும் பிரிட்டிஷ் நாட்டிற்கு சென்று முதலாளித்துவ கல்வியை கற்றனராயினும் அல்லது இலங்கையில் முதலாளித்து கல்வியை கற்றனராயினும் அவர்கள் இலங்கையின் நிலப்பிரபுத்துவத்தின் வார்ப்புகளாகவே இருக்கின்றனர்.

வெளிநாட்டாரின் ஆக்கிரமிப்பால் குறிப்பாக பிரிட்டிஷாரின் ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட சிங்கள பௌத்த நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினரில் கரிசனை கொண்டவர்களாகவே பெரும்பான்மை சிங்கள இனத் தலைவர்கள் அவர்களது அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். தற்போது தாராளப் பொருளாதாரம் பெருமளவில் இலங்கையில் ஆதிக்கம் செய்கின்ற போதும்கூட பிரிட்டிஷாரினால் நேரடியாக பாதிப்பிற்குள்ளான சிங்கள பௌத்த நிலப்பிரபுத்துவத்தை பழைய நிலைக்கு மீட்பது; பௌத்த மதத்தை உறுதியான நிறுவனமாக நிலைநாட்டுவது போன்றவற்றிலேயே தங்கி நின்று அரசியல் வாழ்க்கை நடத்துவதில் அக்கறைகொள்வதாகவே பெரும்

பான்மை இனத்தலைவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். இந்த அடிப்படையிலேயேதான் பெரும்பான்மை இனத்தலைவர்கள் (இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் அவர்கள் நேர்மையாக செயற்பட்ட செயற்படும் நேரங்களில் தவிர) வடக்கு கிழக்கு இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினையை அணுகி வருகின்றனர்.

1948இற்கு பிறகு முற்றாக பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுதலை அடைவதைவிட அவர்களால் இங்கு கொண்டு வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை இங்கிருந்து விரட்டி அடிப்பதனையே பிரதான அரசியல் இயக்கமாக இலங்கை அரசியல் தலைவர்கள் என்றழைக்கப்படுபவர்கள் அக்கறைக் கொண்டனர். அதன் முதற் கட்டமாகவே 1948ஆம் ஆண்டு பிரசாவுரிமை பறிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு தோட்டத் தொழிலாளர்கள் உட்பட பல லட்சக்கணக்கான இந்திய வம்சாவளியினர் நாடற்றவர்களாக்கப்பட்டனர்.

இதனை அடுத்து படிப்படியாக பல வழிகளிலும் இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிராக பல அடக்கு முறை நடவடிக்கைகள் திட்டமிட்டப்படி மேற்கொள்ளப் பட்டன. பெரும்பான்மை சிங்கள மக்களுடன் இணைக்கப் பட முடியாதவர்களாக இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களை பிரித்து வைப்பதில் பிரிட்டிஷார் வெற்றி கண்டனர். அதே போன்று இலங்கை சிங்களத் தலைவர்களும் சிங்கள மக்களை இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களுடன் இணைய விடாதவாறு அவர்களது அரசியலை முன்னெடுத்து வந்தனர்.

இன்றும்கூட பெருமுதலாளித்துவ பன்நாட்டு கம்பனிகள், உலக வங்கி போன்றவற்றின் பிடிக்குள் அகப்பட்டுள்ள முழு இலங்கை மக்களின் விடுதலைப் பற்றிய அக்கறையைவிட, கண்டிய சிங்களவர்களுக்கும்

இந்திய வம்சாவளி மக்களுக்குமிடையேயான இன முரண்பாட்டையே பிரதானமான முரண்பாடாக கூர்மையடையச் செய்வதில் இலங்கையின் ஆளும் வர்க்கத்தினர் வெற்றி கண்டு வருகின்றனர். அந்த அடிப்படையில் இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிராக பலவிதமான அடக்கு முறைகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

இலங்கையில் தொகையில் கூடிய தொழிலாளர் வர்க்கமான தோட்டத் தொழிலாளர்களின் வர்க்க இனத்தனித்துவத்தை சிதைப்பதில் ஆளும் வர்க்கம் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. அவர்களின் வர்க்க இனத்தனித்துவத்திற்கு அடிப்பண்டையாக இருக்கின்ற பெருந்தோட்டத் தொழிற்துறையை இல்லாமலாக்கும் பாதையில் இலங்கையின் ஆளும் வர்க்கத்தினர் மிகவும் வேகமாக பயணம் செய்கின்றனர்.

இலங்கையில் நீதியான சமத்துவமான சமுதாய மாற்றத்துக்கு கூடியளவு உதவக் கூடிய அல்லது அந்த சமுதாய மாற்றத்துக்கான போராட்டத்தில் முன்னணிப் பாத்திரம் வகிக்கக் கூடிய தோட்டத் தொழிலாளர்களை இனரீதியாக தனிமைப்படுத்தி, அவர்களுக்கும் சிங்கள விவசாயிகளுக்குமான முரண்பாட்டை கூர்மையடையச் செய்து அவர்கள் மீது இனரீதியான ஒடுக்கலை மிகவும் வெற்றிகரமாக இலங்கை ஆளும் வர்க்கத்தினர் செய்து வருகின்றனர்.

அதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் வர்க்க இனத் தனித்துவத்தை சிதைத்து ஒரு நீதியான, சமத்துவ மான சமுதாய மாற்றத்தினை பின்தள்ளுவதில் வெற்றி காண இலங்கையின் ஆளும் வர்க்கம் திட்டமிட்டு செயற் பட்டு வருகின்றது.

இந்த நிலைமையில் தோட்டத் தொழிலாளர்களை உள்ளிட்ட முழு இந்திய வம்சாவளி மக்களையும் விடுதலை செய்வதில் அவர்களை அடக்குவதும், சுரண்டுவதும் யார் என்பதும் அம்மக்கள் எவ்வாறு அடக்கப்படுகிறார்கள் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களை மேற்படி அடக்குமுறைகளிலிருந்து எவ்வாறு மீட்பது?

அவர்களின் உரிமைகளை எவ்வாறு உறுதி செய்வது?

அவற்றுக்கான அரசியல் பாதை எது?

இவையே அவர்களின் முன்னுள்ள முக்கிய கேள்விகளாகும்.

# II

# மலையக தேசிய இன உணர்வின் தோற்றமும் வளர்ச்சியும்

## (அ) பிரசாவுரிமை பறிப்பின் முன்பும் பின்பும்

இந்தியாவின் தென்பகுதியில். குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து பிரிட்டிஷாரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கோப்பி பெருந்தோட்டச் செய்கைக்கு தொழிலாளர்களாக இந்திய வம்சாவளியினர் இங்கு கொண்டு வரப்பட்டனர். பின்னர் தேயிலை, றப்பர், தென்னந் தோட்டங்களிலும் தொழிலாளர்களாக வேலை செய்ய அழைத்து வரப்பட்டனர். இதைவிட அரசாங்க பகிரங்க சேவைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் இந்தியர்கள் தொழில் செய்தனர். வர்த்தகத் துறையில் இந்தியர்கள் கூடிய செல்வாக்கை செலுத்தினர்.

1948ஆம் ஆண்டு இலங்கையின் ஆட்சி நிர்வாகத்தை இலங்கையரிடம் பிரிட்டிஷார் ஒப்படைக்க முன்பே இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்கள் இந்தியர்களை இங்கிருந்து விரட்டிவிட வேண்டும் என்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தினர். அதனால் அவர்கள் இலங்கையின் சுதந்திரத்திற்கான கோரிக்கையில் இந்திய வம்சாவளியினரை இணைத்துக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. ஆனால் இடதுசாரித் தலைவர்கள் இலங்கையின் சுதந்திரத்திற்கான கோரிக்கையுடன் இந்திய வம்சாவளியினரையும் இணைத்துக் கொள்வதில்

பல முயற்சிகளை எடுத்தனர். இலங்கை—இந்தியன் காங்கிரஸ் தலைவர்கள் பிரிட்டிஷாருக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

1930களில் அரசாங்க திணைக்களங்களிலும் உள்ளூராட்சி சேவையிலும் தொழில் செய்த இந்திய வம்சாவளியினர் அவர்களது தொழில்களை விட்டுவிட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அதனால் தொழிலை விட்டு வெளியேறியவர்கள் நுவரெலியா பகுதிக்கு, குறிப்பாக கந்தப்பொளை, இராகலைப் பகுதிக்கு சென்று மரக்கறி செய்கையை மேற்கொண் டனர். ஆனால் அவர்கள் விவசாயம் செய்த காணித்துண்டுகளிலிருந்தே வெளியேற்றப்பட்டனர்.

சிங்கள பேரினவாதிகளுக்கு நிர்வாகசேவையில் கொஞ் சம் இடம் கிடைத்தவுடனேயே இந்திய வம்சாவளியினர் மீது எதிர்ப்பு நடவடிக்கையில் வெளிப்படையாகவே ஈடுபட்டனர் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை யின் நிர்வாகம் பொருளாதாரம் என்பவற்றை சிங்களவர்களின் கைகளுக்கு மாற்றுவதையே இலங்கை யின் சுதந்திரம் என்ற அடிப்படையிலேயே சிங்களத் தலைவர்கள் செயற்பட்டனர். அவர்கள் பிரிட்டிஷாரிட மிருந்து இலகுவானமுறையில் இலங்கையை விடுவித்து பிரச்சினையில்லாது பொருளாதார நிலைமையையும் சமாளிக்க முற்பட்டரேயன்று இந்நாட்டின் சகல மக்களையும் இணைத்துக் கொண்டு இலங்கையில் தேசியப் பொருளாதாரத்தை கட்டி வளர்ப்பதில் நேர்மையாக உழைக்கத் தவறினர்.

1931ஆம் ஆண்டு இலங்கையர் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்படும் போது இந்திய வம்சாவளியினருக்கு

குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்குவதில் தயக்கம் காட்டப்பட்டது. நீண்ட வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியிலேயே அவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

1945ஆம் ஆண்டு நாவேஸ்மியர் தோட்டத்தில் 400 ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரித்து அத்தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. அன்று தோட்டத் தொழிலாளர்களின் பலமான ஸ்தாபனமாக இருந்த இலங்கை—இந்திய காங்கிரஸ் தலைமையில் ஹர்த்தால் போராட்டம் செய்யப்பட்டு அது தடுக்கப்பட்டது. எனினும் அத்தோட்டத்து காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு தொழிலாளர்களை வெளியேறும்படி அறிவிக்கப்பட்ட பிறகும் அத்தோட்டத்தில் தொடர்ந்து இருந்த 363 தொழிலாளர்களுக்கு எதிராக அத்தோட்டத்தில் அத்துமீறி பிரவேசித்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது.

அவர்களுக்கு எதிராக வழக்கை விசாரிக்க கேகாலையில் விஷேட நீதிமன்றம் அமைக்கப்பட்டது. அரசாங்கம் பொறுப்பேற்ற அத்தோட்டக்காணியில் அத்துமீறி இருந்தமைக்காக 363 தொழிலாளர்களும் குற்றவாளிகளாக காணப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் மூன்று மாத சிறைத்தண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

அத்தீர்ப்புக்கு எதிராக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இயங்கிய பிரிவுக் கவுன்சில் மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு செய்யப்பட்டது.

இவ்வேளை இதுவிடயம் தொடர்பாக இந்தியாவிலிருந்து இங்கு வந்த எம்.எஸ்.அனி, அன்றைய இலங்கையின் கவர்னர், அன்றைய விவசாய அமைச்சர் டி. எஸ். சேனநாயக்க ஆகியோருக்கிடையே பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையின் முடிவில்

குற்றத் தீர்பளிக்கப்பட்ட நாவேஸ்மியர் தோட்டத்தொழிலாளர்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டது. இருந்த போதும் செல்வநாயகம் என்ற தொழிலாளியின் மேன்முறையீடு மட்டும் வாப்பஸ் பெறப்படவில்லை.

அந்த மேன் முறையீட்டை விசாரித்த பிரிவுக்கவுன்சில் தோட்டங்களில் தொடர்ந்து வசித்துவரும் தொழிலாளர்களுக்கு எதிராக அத்துமீறிப் பிரவேசித்தல் (Criminal Tresspass) என்ற குற்றம் சுமத்த முடியாது என்று தீர்ப்பளித்தது.

இவ்வாறு பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் இருந்த போதும் பேரினவாத தலைவர்கள் இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிராக செயற்பட்ட போது இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்க 1944ஆம் ஆண்டு இங்கு அனுப்பப்பட்டிருந்த சோல்பரி விசாரணைக் குழுவிடம் எந்தவித சலுகையையோ தமக்கென எவ்வித பிரத்தியேக ஏற்பாடுகளையோ இந்திய வம்சாவளியினர் எதிர்பார்க்கவில்லை. இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் சார்பில் சோல்பரிவிசாரணைக்குழுவிடம் சாயட்சிமளித்த இலங்கை—இந்திய காங்கிரஸ் தலைமை ''பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறி இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை வழங்கினால், இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் தங்களை தாங்கள் பாதுகாத்துக் கொள்வார்கள். பிரிட்டிஷார் இங்கிருந்து வெளியேறுவதனால் எங்களுக்கு எந்த தீங்கு ஏற்பட்டாலும் நாங்கள் அதனை சந்திக்கத் தயார். சிறுபான்மையினரின் உரிமையை பாதுகாப்பதற்காக பிரிட்டிஷாரின் ஆட்சி நீடிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை'' என்று கூறியது.

இலங்கை தமிழ் மக்களின் சார்பில் நடைமுறைக்கு சாத்தியமில்லாத 50க்கு 50 உரிமையை பெற்றுத் தரும்படி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஜீ.ஜீ. பொன்னம்பலம்

சோல்பரி விசாரணை குழுவை கேட்டுக் கொண்டார். இலங்கை — இந்தியன் காங்கிரசின் நிலைப்பாடோ வேறாக இருந்தது.

சிறுபான்மையினரின் கோரிக்கையை காரணம் காட்டி இலங்கைக்கான சுதந்திரம் மறுக்கப்படுமோ என்று அஞ்சியும், இந்திய வம்சாவளியினர் இலங்கையின் பிரஜைகள் என்ற அடிப்படையில் சுதந்திர கோரிக்கைக்கு மாறாக எதனையும் செய்யக்கூடாது என்ற நிலைப்பாட்டையே இலங்கை—இந்தியன் காங்கிரஸ் கொண்டிருந்தது.

பிரிட்டிஷார் கட்டுப்பாட்டில் இருக்கும் போதே பேரினவாத அடக்குமுறைகளை சிங்கள பேரினவாதிகள் சுமத்துகிறார்கள் பிரிட்டிஷார் எமது நாட்டு கரையை கடந்த பின்னர் பேரினவாதிகளின் அனுதாபத்திலேயே இந்திய வம்சாவளியினர் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்ற அச்சம் நிலவியபோதும் இலங்கை-இந்தியன் காங்கிரஸின் அன்றைய தலைமை பிரிட்டிஷாரின் தயவில் இந்திய வம்சாவளியினர் இங்கு வாழ்வதைவிட இலங்கையின் சுதந்திரத்தையே முதன்மை படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் 1948ஆம் ஆண்டு இலங்கையின் ஆட்சி நிர்வாகத்தை பிரிட்டிஷார் இலங்கையரிடம் ஒப்படைத்தபிறகு கொண்டுவரப்பட்ட பிரசாவுரிமை சட்டத்தின் காரணமாக இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் பிரசாவுரிமை பறிக்கப்பட்டது.

பிரிட்டிஷார் நாட்டை விட்டு வெளியேறும்போது இலங்கையின் பாராளுமன்றத்திலிருந்தே தெரிவு செய்யப்பட்ட 95 உறுப்பினர்களில் ஏழுபேர் இந்திய வம்சாவளியினராக இருந்தனர். இவர்கள் ஏழு பேரும் 1952 வரையே உறுப்பினர்களாக இருக்க முடிந்தது. ஏனெனில் இந்திய வம்சாவளியினர் பிரசாவுரிமை பறிக்கப்பட்டதனால் அவர்கள் வாக்குரிமையும் இழந்தனர்.

சோல்பரி விசாரணைக் குழுவினர் வழங்கிய அரசியலமைப்பின் உறுப்புரை 29 (4)இன்படி ஏதாவது ஒரு சமூகத்தினருக்கு விஷேடமாக உரிமைகள் வழங்கும். அல்லது ஏதாவது ஒரு சமூகத்தின் உரிமைகளை மறுக்கும் சட்டங்களை இலங்கை பாராளுமன்றம் ஆக்க முடியாது என்று கூறியபோதும் இலங்கையின் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமையான பிரசாவுரிமையை பறிக்கும் சட்டத்தை இலங்கை பாராளுமன்றம் ஆக்கியது.

அச்சட்டத்தினை செல்லும்படியற்றதாக்கும்படி கோரி பிரிவு கவுன்சிலுக்கு இலங்கை-இந்திய காங்கிரஸ் சென்றபோதும் ஏதாவது, ஒரு சமூகத்தை பாதிக்கும் சட்டத்தை ஆக்கமுடியாது என்பது தோட்டத் தொழிலாளர்களை பாதிக்கும் சட்டத்தை ஆக்கமுடியாது என்று கொள்ளப்படலாகாது என்று பிரிவுக் கவுன்சில் தீர்ப்பளித்தது.

எனவே பிரிட்டிஷார் காலத்தில் ஏனைய பிரஜைகள் போன்று பிரிட்டிஷாரின் சொத்தாகக் கொள்ளப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பிரசாவுரிமை சட்டமாக்கப்பட்டபிறகு நாடற்றவர்களாயினர். இச்சட்டத்தின்படி ஒருவர் இலங்கையில் பிறந்திருந்து அவரின் தந்தையும் இலங்கையில் பிறந்திருந்தாலேயே இலங்கை பிரசாவுரிமை வழங்கப்படும் என ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் ஏறக்குறை எல்லோரும் பிரசாவுரிமை பெற முடியாதவர்களாயினர். அச்சட்டத்தை ஆதரித்து அப்போதைய அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்த சி. சுந்திரலிங்கம், கந்தையா வைத்தியநாதன் ஆகிய தமிழ் தலைவர்கள் பாராளுமன்றத்தில் வாக்களித்தனர். ஜீ. ஜீ, பொன்னம்பலமும் அவரின் தமிழ் காங்கிரஸ் கட்சி எம். பீக்களும் எதிராக வாக்களித்தனர். அத்துடன் அப்போது பாராளுமன்றத்திலிருந்த லங்கா சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சி எம்.பீக்கள் எதிராக வாக்களித்தனர்.

அதற்குப் பிறகு 1949ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் பிரசாவுரிமை சட்டம் கொண்டு வரும்படி, அதன் படி திருமணமாகாத ஒருவர் பிரசாவுரிமை கோரி விண்ணப்பிப்பாராயின் அவர் 1936ஆம் ஆண்டு முதல் 1949ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை தொடர்ச்சியாக இலங்கையில் வசித்தார் என்பதை நிரூபிக்க வேண்டும். விண்ணப்பிப்பவர் திருமணமான வராயின் அவர் 1939 ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 1946ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரை தொடர்ச்சியாக இலங்கையில் வசித்தார் என்பதை நிரூபிக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பிப்பவரின் பொருளாதாரநிலைமை நன்றாக இருப்பதையும் நிரூபிக்க வேண்டும். அத்துடன் 1948ஆம் ஆண்டு சட்டத்தில் இருந்த ஏனைய கட்டுப்பாட்டு விதிமுறைகள் இதிலும் இருந்தன். இதனால் இச்சட்டம் முழு இந்திய வம்சாவளியினருக்கும் பிரசாவுரிமை வழங்கவில்லை. இச்சட்டத்தின் கீழ் 850,000 பேர் விண்ணப்பித்திருந்த போதும் 145,000 பேர் மட்டுமே பிரசாவுரிமை பெறத் தகுதியுடையவர்களாக கொள்ளப்பட்டனர். இச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதில்லை என்று இலங்கை-இந்திய காங்கிரஸிடம் கொடுத்த வாக்குறுதியையும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் மீறி ஆதரவாக வாக்களித்தனர். இச் சட்டம் சிறிய தொகையினருக்காவது பிரசாவுரிமையை வழங்குவது என்ற அடிப்படையிலேயே ஜீ.ஜி பொன்னம் பலம் வாக்களித்தார் என்று கூறப்பட்ட போதும் எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட அவரின் ஆதரவாளர்கள் அதனை எதிர்த்து வாக்களித்தார். மேற்படி இலங்கை-இந்தியன் காங்கிரஸிற்கு கொடுத்த வாக்குறுதியை மீறி ஜீ. ஜீ. பொன்னம்பலம் நடந்து கொண்டதால் எஸ். ஜே. வி. செல்வநாயகமும் அவரது ஆதரவாளர்களும் தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழரசு கட்சியை அமைத்தனர்.

சி. சுந்தரலிங்கம் மேற்படி சட்டத்திற்கு எதிராக வாக்களித்தது மட்டுமன்றி அவரது அமைச்சர் பதவியையும் இராஜினாமா செய்தார். பின்னர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அமைச்சரானார். இக்காலகட்டத்திலேயே குடிவரவு குடியகல்வு சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்திய வம்சாவளியினர் இலங்கையில் தங்கியிருக்கும் கால எல்லை வரையறுக்கப்பட்டது.

இந்திய வம்சாவளியினருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரசாவுரிமை பறிப்பு சட்டத்திற்கு எதிராக இலங்கை இந்தியன் காங்கிரஸ் சத்தியாக்கிரக இயக்கத்தை முன்னெடுத்தது. அது இலங்கை தொழிலாளர் காங்கிரசாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட பிறகு 1952ஆம் ஆண்டின் முற்பகுதியில் கொழும்பு புறக்கோட்டையிலிருந்த அதன் தலைமைக் காரியாலயத்திலிருந்து பிரதம மந்திரியின் காரியாலயத்தை நோக்கி ஆயிரத்துக்கு மேற்பட்டோர் ஊர்வலமாக சென்றனர். அந்த ஊர்வலத்தை இடைமறித்த பொலிசார் திரு தொண்டமானையும், ஜனாப் அஸீஸையும் கைது செய்து தூர இடத்திற்கு கொண்டு சென்று இறக்கி விட்டனர். ஊர்வலத்தையும் கலைத்தனர்.

1952 தேர்தலின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சில உறுப்பினர்கள் வாக்குச் சாவடிகளுக்கு சென்று(வாக்குரிமை பறிக்கப்பட்டிருந்த போதும்) வாக்களிக்க இடமளிக்கும்படி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவை பொலிஸ் அடக்குமுறையால் முறியடிக்கப்பட்டன.

1952ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு கூடிய பாராளுமன்ற கூட்டத் தொடர் ஆரம்பவிழா வைபவத்தை, 1952ஆம் ஆண்டுடன் எம்.பி. பதவியை இழந்த இலங்கை–இந்தியன் காங்கிரஸ் எம், பீக்கள் குழப்ப முயற்சிகளை எடுத்தனர். பிரதமரிடம் மகஜர் ஒன்றை கொடுக்கவும் முற்பட்டனர். ஆனால் பிரதமரின் ஆணையின்படி

அவர்கள் பாராளுமன்ற வளவிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்.

அதன் பிறகு பதவி இழந்த அந்த எம்பீக்கள் நூறு நாட்களுக்கு மேல் சுழற்சி முறையில் பிரதமரின் காரியாலய விறாந்தையில் உண்ணாவிரதப் போராட்டத்தை செய்தனர். அவற்றால் எதுவும் செய்யமுடியவில்லை.

இத்தருணத்தில் இடதுசாரி கட்சிகள் பலமாக இருந்தபோதும் பிரசாவுரிமை பறிப்பிற்கு எதிராக ஒரு பெரிய போராட்டத்தை முன்னெடுக்கவோ உதவவோ இல்லை. அது மட்டுமன்றி இந்திய வம்சாவளி மக்களின் சார்பான போராட்டங்களுக்கு வெளிப்படையாக ஆதரவளிக்கவுமில்லை. இதனால் பிரசாவுரிமை பிரச்சினையும் அதற்கான போராட்டங்களும் இந்திய வம்சாவளி மக்களுக்குரியதாக மட்டும் வரையறை செய்யப்பட்டது.

பிரசாவுரிமை என்பது இடதுசாரி கட்சிகளின் கோரிக்கைகளில் ஒன்றாக மட்டுமே இருந்தது. அவர்களின் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் அதற்கு காரணமாகும் என்பது தெளிவானதே.

அதே வேளை தேயிலை றபபர் தோட்ட பொருளாதாரத்தை ஆட்சி செய்யும் தோட்டத் தொழிலாளர்களை சக்தியாக கொண்டிருந்த இலங்கை — இந்தியன் காங்கிரஸ் — இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு பாரிய போராட்டத்தை செய்யாதது வரலாற்றில் பெரியதொரு தவறாகும். அதனை மேற்கொண்டிருந்தால் உரிமைகளை நிலைநாட்டியிருக்க முடியும்.

1956 ஆம் ஆண்டு வரையப்பட்ட பண்டாரநாயக்க— செல்வநாயகம் ஒப்பந்தம் நடைமுறையிலிடப்படிருந்தால் பிரசாவுரிமை பிரச்சினைக்கும் தீர்வு காணப் (பிரசா

வுரிமை வழங்க ஒழுங்குகள் இருந்தன) பட்டிருக்கும். துரதிருஷ்ட வசமாக அது கிழித்தெறியப்பட்டது.

1964 ஆம் ஆண்டு சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவரை பிரசாவுரிமைக்கான கோரிக்கை மட்டுமே இருந்தது. போராட்டங்கள் எதுவும் நடை பெறவில்லை.

1952 ஆம் ஆண்டுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய வம்சாவளி எம் பீக்கள் பதவி காலம் முடிவடைந்த பின்னர் 1952 — 1956 வரை இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதித்துவம் செய்ய பாராளுமன்றத்தில் ஒருவரும் இருக்கவில்லை. ஒரு நியமன எம். பி. கூட இருக்கவில்லை' 1956 தொடக்கம் ஒரு நியமன எம்.பி.யும் 1965–70 வரை இரண்டு நியமன எம்.பீக்களும் 1970–77 வரை ஒரு நியமன எம்.பியும் இந்திய வம்சாளியினரை பிரதிநிதித் துவம் செய்தனர். 1977 முதல் 1988 வரை ஒரு தேர்ந் தெடுக்கப்பட்ட எம்.பியும் 1988 இற்கு பிறகு இரண்டும் பிற்காலத்தில் 4 எம்.பியும் தற்போது 10 எம். பிக்களும் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

1953 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த சேர் — ஜோன் கொத்தலாவலை இந்திய வம்சாவளியினருக்கு எதிராக கடுமையான போக்கையே கடைபிடித்தார். ஐந்து வருடம் தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வதிவிட அனுமதி சேர். ஜோன் கொத்தலாவலையாலேயே பறிக்கப்பட்டது. இலங்கை யரை மணமுடித்த கணவன் அல்லது மனைவிக்கு பிரசா வுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற உரிமையும் மறுக்கப் பட்டது.

இந்திய வம்சாவளியினர் மீது பிரசாவுரிமை பறிப்பு உட்பட பல்வேறுபட்ட இன ஒடுக்குமுறைகள் மேற் கொள்ளப்பட்ட போதும் அவர்களை இந்தியாவுக்கு

திருப்பி அழைக்க முடியாது என்று இந்தியா இறுக்க மாகவே இருந்தது. அதனால் இந்தியர்களை இந்தியா வுக்கு திருப்பி அனுப்பி விடவேண்டும் என்ற இலங்கையின் பேரினவாதிகளின் விடாப்பிடி தளரவேண்டியதாயிற்று.

அத்துடன் சுதந்திரக்கட்சி இடதுசாரி கட்சிகளிடம் சிறிதளவாவது இருந்த தேசியத் தன்மை காரணமாக 1964 ஆம் ஆண்டு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் ஏற் பட்டது.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி 3 லட்சம் இந்திய வம்சாவளியினருக்கு இலங்கை பிரசாவுரிமை வழங்கப்படும் என்றும் 5 லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு இந்திய பிரசாவுரிமை வழங்குவ்து என்றும் இணக்கம் காணப்பட்டது. 1974 ஆம் ஆண்டு சிறிமா — இந்திரா இணக்கப்பாட்டின்படி 75 ஆயிரம் பேருக்கு இந்தியப் பிரசாவுரிமையும் 75 ஆயிரம் பேருக்கு இலங்கை பிரசா வுரிமை வழங்குவது என்றும் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தப் படி தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் பூரணமாக நடை முறைப்படுத்தப்பட்ட பிறகே மேற்படி விடயத்தை நடை முறைப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போதும் 1965 - 70 வரை ஆட்சி யிலிருந்த டட்லி சேனநாயக்க தலைமையிலான யூ. என். பி அரசாங்கம் இலங்கை பிரசாவுரிமை வழங்குவதில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

மாறாக பிரசாவுரிமை விண்ணப்பங்கள் கடுமையாக பரிசீலிக்கப்பட்டு பெருமளவில் நிராகரிக்கப்பட்டன.

அதாவது பிரசாவுரிமை விண்ணப்பமொன்றை பரிசீலிக்கும் போது பிரசாவுரிமை வழங்கக்கூடாது என்ற ஊக்கத்தினை அடிப்படையாக கொள்ள வேண்டும் என்பதை பிரசாவுரிமை வழங்குவதற்கான கோட்பாடாக

கொள்ள வேண்டும் என்பதை டட்லி சேன நாயக்க நிலை நிறுத்தினார்.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் ஒருவரும் பிரசாவுரிமை கோரி விண்ணப்பிக்கக் கூடாது என்றும் இ. தொ. கா. இந்திய வம்சாவளி மக்களைக் கேட்டுக் கொண்டது. அதே போன்று இந்திய பிரசாவுரிமை கோரி எவரும் விண்ணப்பிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டது. எனினும் அவை அரசியல் நடவடிக்கை களாக பின்பற்றப்படவில்லை.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி இலங்கை பிரசாவுரிமை கோரி பெருந்தொகையானவர்கள் விண்ணப்பித்தார்கள் அதில் நிராகரிக்கப்பட்டவர்களும் இந்திய பிரசாவுரிமை கோரி விண்ணப்பித்தவர்களும் பெருமளவில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். 150 ஆண்டுகளுக்கு மேல் இங்கு வாழ்ந்து இந்நாட்டை வளப் படுத்தியவர்கள் விருப்பமில்லாமல் ஒப்பந்த ஏற்பாட்டின் காரணமாக ''கட்டாயமாக நாடு கடத்தப்பட்டார்கள்'' என்றே கூற வேண்டும்.

இரண்டு, மூன்று தலைமுறைகளாக இங்கு வாழ்ந்த வர்கள் இந்திய பாஸ்போட்டுடனும் சிறிதளவு ஈ.பி.எப் பணத்துடன் (செலவழித்தது போக மீதி இருந்தால்) ஒரு கிழமைக்கு இரண்டு முறை அதாவது செவ்வாயன்றும் வியாழனன்றும் ஒரு வித பிரயாண வசதியுமற்ற மின் விளக்கு வெளிச்சமுமின்றி இரண்டு புகையிரதப் பெட்டி களுக்குள் நூற்றுக்கு மேற்பட்டோர் அடைக்கப்பட்டு தலைமன்னார் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கி ருந்து கப்பல் மூலம் இராமேஸ்வரததிற்கு அனுப்பப் பட்டனர்.

பதுளையிலிருந்து புறப்பட்டு ஒவ்வொரு மலையக புகையிரத நிலையங்களிலும் நிறுத்தப்பட்டு தோட்டத்

தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு செல்லும் புகையிரதத்தில் அழுகை சத்தம் ஒலித்தபடி செல்லும். அவர்களை வழி அனுப்ப வைக்க உறவினர்களும் அயலவர்களும். நண்பர்களும் புகையிரத நிலையங்களுக்கு வந்து கதறி அழுது தீர்த்து விட்டு போவார்கள். இதனால் இந்தப் புகையிரதம் ''அழுகைக் கோச்சி?' என்றே அழைக்கப்பட்டது.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தப்படி இந்திய வம்சாவளியினரில் ஒரு தொகையினருக்கு இலங்கை பிரசாவுரிமை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் இங்கு நீண்ட காலமாக வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்களை நாடு கடத்தவும் வழி செய்தது. மனைவியை பிரித்து கணவனையும், கணவனைப் பிரித்து மனைவியையும், சகோதரர்களைப் பிரித்து சகோதரிகளையும் பெற்றோரை பிரித்து பிள்ளைகளையும், நண்பர்களையும், காதலர்களையும் பிரித்து பெருந்தொகையானோரை மனசாட்சியின்றி ஈவிரக்க மின்றி நாடுகடத்த வழி செய்தது.

1970–77 காலகட்டத்தில் பெருமளவான இந்திய வம்சாவளியினர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். அக்காலத்தில் நிலவிய பொருட் தட்டுப்பாடு, பஞ்சம், காணிச் சுவீகரிப்பு, தோட்டங்களில் திணிக்கப்பட்ட தொழிலாளர்கள் மீதான அடக்குமுறைகளும் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு செல்லத் தூண்டின.

இந்த அடக்குமுறைகளுக்கு மத்தியில் இந்நாட்டின் பிரசாவுரிமையை பெறவேண்டும் என்ற எண்ணமும், இது எமது நாடு, இங்கிருந்து எமது விருப்பமின்றி எம்மை யாரும் வெளியேற்ற முடியாது என்ற கருத்தும் மலையக மக்கள் மத்தியில் ஆழமாக பதிந்தது.

நடைமுறையில் பெரிய பாதிப்பை ஏற்படுத்திய 'அழுகைக்கோச்சி' அனுபவங்களும் பிற அடக்குமுறை நடைமுறைகளும் இது எமது மண், இது எமது நாடு என்ற எண்ணம் மலையக மக்கள் மத்தியில் ஒரு அரசியற் கருத்தாக உருப்பெற வழிகோலின.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு பிரசாவுரிமை வழங்கப்பட்டு வாக்குரிமை கிடைத்தாலும் 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பை அடுத்து புதிய தேர்தல் தொகுதி நிர்ணயத்தாலும் நுவரெலியா மஸ்கேலியா தொகுதி பல அங்கத்தவர்கள் தொகுதியாக நிர்ணயிக்கப்பட்டதாலும் அத்தொகுதியிலிருந்து ஒரு எம். பி இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதாவது 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இ. தொ காவின் சார்பில் சேவல் சின்னத்தில் போட்டியிட்ட இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் நுவரெலியா மஸ்கெலியா தொகுதியின் மூன்றாவது எம்.பியாக தெரிவு செய்யப்பட்டார்.

அவர் யூ. என். பி.யுடன் கொண்டிருந்த இணக்கத்தின்படி இரண்டு வாக்குகளை யூ. என். பி. வேட்பாளர் காமினி திஸாநாயக்கவுக்கு போடும்படி தனக்கு ஒரு வாக்கை போடும்படியும் (ஒரு வாக்காளருக்கு மூன்று வாக்குகள் இருந்தன) நுவரெலியா-மஸ்கெலியா தமிழ் வாக்காளர்களை கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க பெருமளவு தமிழ் வாக்காளர்கள் நடந்து கொண்டமையால் காமினி திஸாநாயக முதலாவது எம்.பி. யாக தெரிவு செய்யப்பட்டார். 1947 பாராளுமன்றத்திற்குப் பிறகு 1977இல்தான் இந்திய வம்சாவளியினரை பிரதிநிதித்துவப்படுத்த ஒரு எம்.பி. தெரிவு செய்யப்பட்டார்,

அதுவரை தொழிற்சங்க நடவடிக்கைகளில் மட்டும் தங்கியிருந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு பாராளு மன்ற தேர்தலில் வாக்களிப்பதில் நாட்டம் ஏற்பட்டது.

இக்கால கட்டத்திற்கு பிறகும் கூட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டிய அனைவருக்கும் பிரசாவுரிமை வழங்கி முடிக்கப்பட வில்லை. அதே வேளை அழுகை கோச்சியில் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு அனுப்பும் படலமும் தொடர்ந்து கொண்டிருந்தது. இந்தியாவுக்கு அனுபப் பட்டவர்கள் அங்கு 'சிலோன்காரர்கள்' என்று ஒதுக்கப் பட்டனர். பொருளாதார ரீதியாகவும் பெரிய கஷ்டங் களுக்குள்ளாகியினர். அங்கு அவர்கள் ஏனைய இந்தியப் பிரஜைகளைப் போலன்றி இரண்டாந்தாரமாக ஒரு கூலிக் கூட்டமாகவே மதிக்கப்பட்டு வருகின்றனர்.

1983 ஆண்டு யூலை இன வன்முறையை அடுத்து உருவாகிய மோசமான சூழ்நிலையை காரணமாக இலங்கைத் தமிழர்கள் பெருந்தொகையாக அகதிகளாக இந்தியாவுக்கு சென்றனர்.

அதனால் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தப்படி இந்தியா வுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களை இந்தியா ஏற்க மறுத்தது. அவர்களை ஏற்றிச் செல்வதற்கான கப்பற் சேவையையும் இந்தியா நிறுத்தியது. அதன் பிறகு 1987 இல் ஏற்பட்ட இலங்கை — இந்திய சமாதான உடன் படிக்கையின்படி இந்தியாவிலிருக்கும் அகதிகள் இலங்கைக்கும் அனுப்பப்படும் போதே சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தப்படி இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டிய வர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற ஏற்பாடு இருந்தது.

ஆனால் மேற்படி இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டிய இந்திய பாஸ்போர்ட் பெற்றவர்களுக்கு

இலங்கை பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது தற்போது முக்கிய உரிமைக் கோரிக்கையாக இருக்கிறது.

இதற்கு மத்தியில் அவர்களை வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை யூ. என். பி. அரசாங்கம் அமைச்சர் களாலும் ஏனைய பேரினவாதிகளாலும் விடப்படுவ துண்டு ஆனால் அவர்களுக்கு பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துவருவதை அவதானிக்த முடியும்.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் சிறிமா — இந்திரா இணக்கப்பாடு என்பவற்றுக்கு உட்படாதவர்கள் நாடற்ற வர்கள் என்ற பேரில் ஏறக்குறைய 96 ஆயிரம் பேரும் அவர்களது வழித்தோன்றல்களும் விடப்பட்டிருந்தனர். அவர்கள் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 14(2) இன்படி ஏனைய பிரசைகளுக்கு போன்று 10 வருட காலத்திற்கு அடிப்படை உரிமையுடையர்களாக பிரகடனம் செய்யப்பட்டனர்.

தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து வலுத்த கோரிக்கைகள் காரணமாகவும், வடக்கு கிழக்கு தீவர வாதப்போராட்டத்தின் விளைவாகவும், இ. தொ. கா. யூ. என். பி. பேரம் பேச்சாலும் நாடற்றவர்கள் என்றழைக்கப்பட்டவர்களை இந்தியா ஏற்க மறுத்ததா லும்1986இல் ஒரு சட்டமியற்றப்பட்டு அவர்களுக்கு பிரசா வுரிமை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனை யூ. என். பி எம்.பிக்களும்,கம்யூனிஸ்ட் கட்சி எம்.பியுமே ஆதரித்து வாக்களித்தனர் சுதந்திரக் கட்சி எம் பிக்களும் மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பியும் ஆதரிக்கவில்லை.

இந்தச் சட்டத்தின் படி பிரசாவுரிமை சான்றிதழ் வழங்குவதில் நிலவிய நடைமுறைச் சிக்கல்கள் காரண மாக குறிப்பாக நிர்வாகிகளின் பேரினவாதப் போக்கு

காரணமாக நிலவிய முட்டுக் கட்டைகளை அகற்றவும் நாடற்றவர்கள் அனைவரையும் இலங்கைப் பிரசாவுரிமை யுடையவர்களாக பொதுப் பிரகடனம் செய்யும் சட்ட மொன்று 1988 இல் ஆக்கப்பட்டது. அதன்படி பிரசா வுரிமையை உறுதி செய்து கொள்ள பிரசாவுரிமைச் சான்றிதழ் கேட்பது தவிர்க்கப்பட்டாலும் நடை முறையில் சிக்கல்களும் முட்டுக்கட்டைகளும் இன்னும் இருக்கின்றன.

இவ்வாறு பிரசாவுரிமை பெற்றவர்களில் பெரும் பாலானோர் வாக்குரிமையையும் பெற்றனர். அந்த அடிப் படையில் உள்ளூராட்சி, மாகாணசபை, பாராளுமன்றத் தேர்தல்களில் உறுப்பினர்களை தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றதுடன் இன்று அவர்களை பிரதிநிதித் துவம் செய்யும் பல உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

அவர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்து வருவதனால் அவர்களை வாக்காளர்களாக பதிவதில் திட்டமிட்டு கடுமையான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதுடன், வேண்டுமென்றே வாக்காளர் டாப்பில் பதியப்படுவது தவிர்க்கப்பட்டும் வருகிறது. சுருங்கக் கூறின் பிரசா வுரிமைப் பிரச்சினையும், வாக்குரிமைப் பிரச்சினையும் இன்னும் முற்றாகத் தீர்க்கப்படாத நிலையில் விடப்பட் டுள்ளன.

1994 இல் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அரசியலமைப்பு, தேர்தல் தொகுதி, வாக்குரிமை முறை என்பவற்றில் மேற் கொள்ளப்படவுள்ள திருத்தங்களால் மலையக மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் குறைந்து விடும் அபாயம் இருக்கிறது. இன்று 10 எம்.பிக்கள் இருக்கிறார்கள். தேர்தல் தொகுதியிலும், வாக்களிப்பு முறையிலும் தற்போதிருக்கும் முறை மாற்றப்பட்டு தொகுதி முறையில் அரைவாசி எம்.பிக்களும், விகிதாசார முறைப்படி

அரைவாசி எம்.பிக்களும் தெரிவு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டால் மேற்படி தொகை 3 ஆகக் குறையும் 1948 ஆம் ஆண்டு இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதற்குக் காரணம் அவர்களின் பெரும்பகுதியினர் தொழிலாளர் என்பதும், அவர்கள் தேசிய ரீதியாக சோஷலிஸத்தை உயர்த்திப் பிடித்த இடதுசாரிகளை ஆதரித்தமையுமாகும் என்று அரசியல் ஆய்வாளர்கள் பலர் கூறியுள்ளனர்.

அதாவது இலங்கையில் தொகையில் கூடிய தொழிலாளர் வர்க்கமான தோட்டத் தொழிலாளர்கள் ஒரு வர்க்க சக்தியாக வளர்ந்து அரசியல் சக்தியாக வளர்ந்தால் இலங்கையில் அரசியல் முறைமை தொடர்ந்து முதலாளித்துவ முறையாக இருப்பது சாத்தியமில்லை என்பதனாலேயே தோட்டத் தொழிலாளர்களின் வர்க்கத் தனித்துவத்தை சிதைக்கும் நோக்கில பிரசாவுரிமை பறிக்கப்பட்டது என்பதாகும். அத்துடன் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு சிறுபான்மை இனமாக இருந்தாலும் இந்திய எதிர்ப்பு இலங்கையில் தீவிரமடைந்திருந்தாலும் இந்தியர்களின் உரிமைகளைப் பறிக்கிறோம் என்ற பேரில் தோட்டத் தொழிலாளர்களின் பிரசாவுரிமை பேரினவாதிகளால் பறிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்கள் இந்தியர்கள் என்று ஒதுக்கப்பட்டதாலும் அவர்களின் வருகையினாலேயே சிங்கள விவசாயிகள் பாதிக்கப்பட்டனர் என்ற பிரசாரம் வலிமையானதாக இருந்ததாலும் தேசியக் கட்சிகள் எனப்பட்ட யூ.என்.பி. சுதந்திரக் கட்சி என்பவற்றின் பேரினவாத போக்காலும் சிங்கள விவசாயிகளும் தோட்டத் தொழிலாளர்களும் இயல்பாக வர்க்க ரீதியாக ஐக்கியப்பட முடியாமல் போனது. 'வர்க்கப் புரட்சி என்ற அடிப்படையில் அரசியல் செய்த பழைய இடதுசாரி அரசியல் கட்சிகளும் கூட மலையக மக்களின் தனித்துவமான இனப்பிரச்சினைகளை சரியாக அணுக

வில்லை. நாட்டின் சகல சமூகத்தவரையும் ஐக்கியப் படுத்த யதார்த்தமான ஆரோக்கியமான நடவடிக்கை களை எடுக்கவில்லை. வடக்கு கிழக்கு விவசாயிகள் பிரதேச ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் வேறுபட்டு இருந்தமையினாலும் அவர்களின் மத்தியிலிருந்த அரசியல் தலைமையின் தன்மையின் காரணமாகவும் தோட்டத் தொழிலாளர்களுடனான அவர்களின் ஐக்கியம் சாத்தியப் படவில்லை.

தற்போது பதவியில் இருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கூட மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வது இந்தியப் பாஸ்போர்ட் பெற்றவர்களுக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்குவது என்பவற்றில் ஆரோக்கியமான நடவடிக்கை களை எடுக்குமா என்பது கேள்வியே.

பிரசாவுரிமை பறித்தமை பறித்த பிரசாவுரிமையை வழங்கியமை என்பவற்றில் மட்டுமின்றி பிரசாவுரிமை வழங்கப்பட்ட பிறகும் கூட வித்தியாசமான ஒரு சமூகமாகவே மலையக மக்கள் அணுகப்பட்டு வரு கின்றனர்.

## (ஆ) கல்வி வளர்ச்சி

வாக்குரிமைப் பறிப்பு சட்டம் எனக் கொள்ளப்பட்ட 1949ஆம் ஆண்டு இந்திய—பாகிஸ்தான் பிரசாவுரிமைச் சட்டத்தை ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அவரது ஆதரவான எம்.பிக்களும் ஆதரித்தமையை அரசியல் வரலாற்றில் இந்திய வம்சாவளி மக்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கும் பெரியதொரு இடைவெளியை ஏற்படுத் தியது.

அத்துடன் தோட்டத் தொழிலாளர்களை மேற் பார்வை செய்யும் உத்தியோகத்தர்களாகவும் தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகவும் தொழில் புரியவும்

கல்வியில் தேர்ச்சி பெற்ற யாழ்ப்பாணத்தவர்கள் வாய்ப்பைப் பெற்றனர் தோட்டத் தொழிற்சாலைகளிலும் காரியாலயங்களிலும் தோட்டமலை வேலைகளிலும் மேற்பார்வை செய்யும் தோட்ட உத்தியோகத்தர்களாக வேலை செய்த யாழ்ப்பாணத்தவர்கள் தோட்டங்களை நடத்திய பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கும் பிற்காலத்தில் கம்பெனிகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகளுக்கும் விசுவாசமாக செயற்பட வேண்டியிருந்தனர்.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் கடுமையாக சுரண்டப்பட நேரடியாக தெரியக்கூடிய வகையில் யாழ்ப்பாணத்து உத்தியோகத்தர்கள் காரணமாக இருந்தனர். ஆரம்பத்தில் தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக கடமையாற்றிய யாழ்ப்பாணத்தவர்கள் முழுநேர ஆசிரியர்களாகவன்றி தோட்ட காரியாலயங்களில் லிகிதர்களாகவும் வேலை செய்தனர். இவர்களில் பலர் மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தனர் என்பதும் மிகவும் கசப்பான வரலாற்று அம்சமாகவே கொள்ளப்படுகின்றது.

1949ஆம் ஆண்டு பிரசாவுரிமைச் சட்டத்தை ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அவரது ஆதரவான எம்.பிக்களும் ஆதரித்த அதேவேளையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் அவரது ஆதரவாளர்களும் எதிர்த்து வாக்களித்தனர். அதுமட்டுமன்றி தமிழ் காங்கிரஸில் இருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை அமைத்தனர். இதுபோன்று மலையக மக்கள் மத்தியில் சேவை மனப்பான்மையுடன் செயற்பட்ட தோட்ட உத்தியோகத்தர்களும், ஆசிரியர்களும் சேவையால் மலையக மக்கள் மத்தியில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி என்பன குறைத்து மதிப்பிட முடியாததாகும். இவர்களின் சேவையிலும், மலையகத்தில் படித்தவர்களின் சேவை

யாலும் 1960களில் மலையகத்தில் படித்தவர்களின் கூட்டம் உருவாகியதுடன் அதனூடாக கல்வி, கலை இலக்கிய அரசியல் சமூக விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

இலங்கையின் இடதுசாரி இயக்க வளர்ச்சி காரணமாக குறிப்பாக 1960களில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகள் (சீன சார்பு கட்சி) அரசியல் வேலைத்திட்டங்களின் விளைவாக மலையகத்தில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியினாலும் மலையக இளைஞர்களிடையே கலை இலக்கிய அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் மலையகத்தில் கற்றவர்கள் (ஆசிரியர்கள், தோட்ட உத்தயோகத்தர்களில் ஏறக்குறைய எல்லோரும்). செங்கொடிச் சங்கத்தின் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர் எனலாம்.

1960 கடைசியிலும் 1970 களிலும் தோழர் என். சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாலும் அனுதாபிகளாகவும் இருந்த யாழ்ப்பாணத்தவர்களும், வேறு இடதுசாரி சிந்தனைகளின் பாதிப்புக்குட்பட்ட யாழ்ப்பாணத்தவர்களும் மலையகத்தில் ஆசிரியர்களாக பெருந்தொகையில் செயற்பட்டனர். அத்துடன் செங்கொடிச்சங்க தொழிற்சங்க வேலைகளிலும் ஈடுபட்டனர். இவர்களின் முயற்சியாலும் மேலும் மனிதநேயங் கொண்டவர்களாலும், யாழ்ப்பாணத்தில் அடக்கப்பட்ட சமூகத்திலிருந்து ஆசிரியர்களாக மலையகத்திற்கு வந்தவர்களாலும் அடக்குமுறை மிகுந்த சூழ்நிலைகளிலும் மலையகத்தில் கல்வி வளர்ச்சி பெற்ற இளைஞர் சமூகமும் உருவாக்கப்பட்டதுடன் அரசியல் விழிப்புணர்வும் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அபிவிருத்தியின் காரணமாக தாங்கள் இந்தியர்களல்லர், இலங்கைப் பிரஜைகள் என்ற கருத்தும் இலங்கை தமது தாய்நாடு என்ற கருத்தும் மலையக மக்களிடையே ஏற்படலாயிற்று. அதன் வளர்ச்சிப்

போக்கிலேயே இந்திய வம்சாவளியினர் மலையக மக்கள் என்று அழைக்கப்படலாயினர்.

இவ்வாறான வளர்ச்சி ஏற்பட்ட போது தோட்டசு தொழிலாளர்கள் சிங்கள பேரினவாத அடக்குமுறைக்கு மட்டுமன்றி யாழ்ப்பாண ஆதிக்கவாதத்தின் (யாழ்ப்பாண ஆதிக்கவாதம் ஸ்தாபனப்படுத்தப்பட்டதாக இருக்க வில்லை) செயற்பாடுகளுக்கும் உட்பட்டனர். நாளடை வில் மலையக படித்தவர்கள் யாழ்ப்பாண படித்தவர் களுடன் உத்தியோகம் பெறும் விடயங்களில் போட்டியிட வேண்டியிருந்தனர்.

இக்காரணிகளால் இந்திய வம்சாவளியினர் இனரீதியாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் ஒரு பகுதியாக கொள்ளப்பட முடியவில்லை. இதனால் மலையக படித்த இளைஞர்கள் மத்தியில் பேரினவாதத் திற்கு எதிரான மலையக தேசிய இன உணர்வு என்பதைவிட யாழ்ப்பாணத்தவருக்கு எதிரான எதிர்ப்புணர்வே ஆரம்பத்தில் மேலோங்கியிருந்தது. இது குறுகிய மலையக பிரதேச வாதம் வளர்வதற்கு வாய்ப்பானது.

இதைவிட இந்திய வம்சாவளி மக்கள் வாழும் பிரதேசங்கள், அவர்களின் பொருளாதாரம், கலாசாரம் என்பனவும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிலிருந்து வேறுபட்ட சமூகமாக வளர அடிப்படையானது.

ஆனால் 1983 இனக்கலவரத்தை அடுத்து மலையக படித்தவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் பெரிய பாதிப்பு ஏற்பட்டது. மலையகத்தின் படித்தவர்களும், வியாபாரி களும் இடம் பெயர வேண்டி வந்தது. இவர்களின் இடம் பெயர்வால் ஏற்பட்ட வெற்றிடங்கள் யாழ்ப்பாணத்தவர் களாலன்றி பெரும்பான்மை சிங்களவர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டன. அத்துடன் மலையக படித்தவர் களுக்கு எதிராக பொலிஸ் அடக்குமுறைகள் மேற்

கொள்ளப்பட்டதும் ஒரு சமூகமாக வளரவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. மலையக படித்தவர்கள் பிரதானமாக பேரினவாதத்திற்கு எதிராக போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மலையகத்தின் படித்தவர்கள் மலையகத்திலேயே அவர்களது தொழிலை செய்ய முடியாத, ஒரு சமூகமாக வாழ்வதற்கு சவாலான பேரின ஒடுக்குமுறைகளுக்கு நேரடியாக முகம் கொடுக்கலாயினர்.

தொழிலாளர் குடும்பங்களிலிருந்து ஆசிரியர்களாக வந்த இளைஞர்களும் ஒரு சமூகமாக வளர்வதில் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

ஒரு சமூகமாக வளர்வதற்கு நேரடியாக தடையாக இருக்கின்ற பேரினவாதத்திற்கும் இன ஒடுக்கலுக்கும் எதிராக போராட மலையக தேசிய இன உணர்வு என்ற கருத்தாக்கம் வளர்ச்சி அடைந்துள்ளது. இதன் அடிப்படையில் முழு மலையக மக்களின் வர்க்க, இனத் தன்னடையாளங்களை பாதுகாக்கும் போராட்டம் படித்த இளைஞர்கள் மத்தியிலும் தற்போது ஒரு ஆரோக்கியமான அடித்தளத்தை இட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

மலையக தோட்டங்களிலும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிலும் ஏற்படுகின்ற வேலைவாய்ப்புகளில் மலையக படித்த இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் மலையக மாணவர்களுக்கென தனியான கல்வி நிறுவனங்கள் குறிப்பாக ஆசிரியர் பயிற்சி கலாசாலை—கல்வியிற் கல்லூரி என்பவற்றை வென்றெடுப்பதற்கான கோரிக்கைகளிலும் கூட மலையக தேசிய இன உணர்வின் வளர்ச்சியை காணமுடிகிறது.

## (இ) திட்டமிட்ட குடியேற்றம்

பிரிட்டிஷாரின் காலத்தில் மட்டுமன்றி 1948இற்குப் பிறகும் இந்திய வம்சாவளியினரை பெரும்பான்மை சிங்கள மக்களிலிருந்து பிரித்து வைக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்தின் காணிச்சீர் திருத்தம், குடியேற்றம், வீட்டுத் திட்டங்கள் போன்றவை உள்ளிட்ட ஒவ்வொரு திட்டங்களிலும் மலையக மக்கள் சமமாக நடத்தப்பட்டவில்லை என்பதை அவதானிக்க முடியும். உயர்ந்த மலைநாட்டின் பெருமளவில் அடர்ந்த காடுகள் மலையக மக்களால் அழிக்கப்பட்டே கோப்பி, தேயிலை ரப்பர் என்பன பயிரிடப்பட்டன. சனநடமாட்டமில்லாத அக்காடுகள் தனிப்பட்ட யாருக்கும் சொந்தமாக இருந்திருக்க முடியாது. உயரம் குறைந்த மலைப்பகுதிகளில் மலையக சிங்கள மக்களால் சேனைப் பயிற்ச்செய்கை செய்த காணிகளும் பெருந்தோட்டச் செய்கைக்காக பிரிட்ஷாரினால் அபகரிக்கப்பட்டன என்பதில் உண்மை இல்லாமலில்லை. நெற்பயிற்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட இடங்களில் பெருந்தொட்டச் செய்கை மேற்கொள்ளப்படவில்லை (முடியாததும் கூட) அத்துடன் கண்டியச் சிங்கள விவசாயிகளின் நிலம் பெரும்பாலும் நெற்செய்கைநிலமாக இருந்தபடியால் பெருந்தொட்டப் பயிற்ச்செய்கைக்காக அவர்களது நிலங்கள் பிரிட்டிஷாரால் பறிக்கப்பட்டன என்பதில் உண்மையிருக்க முடியாது.

பிரிட்டிஷாரினால் 1849ஆம் ஆண்டு நிறைவேறப்பட்ட முடிக்குரிய நிலங்கள் கட்டளைச்சட்டம் 1897இல் நிறைவேறப்பட்ட பயன்படுத்தப்படாத தரிசு நிலச்சட்டம் என்பவற்றின்கீழ் காணி உரித்து சரியாக காட்டப்பட வேண்டும் என்று காணிகளுக்கு உரிமை கோரியவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். அந்த உரித்தை சரியாக காட்டாதவர்களின் காணிகள் அரசாங்கத்தால் பறிமுதல்

செய்யப்பட்டன. அத்துடன் வீதிகள் போடவும். பெருந்தோட்டங்கள் செய்யவும் ஆகக் குறைந்த விலைக்கு சிங்கள விவசாயிகளிடமிருந்து காணிகள் பிரிட்டிஷ் நிர்வாக உத்தியோகத்தர்களால் வாங்கப்பட்டன.

பிரிட்டிஷார் 1948இல் இலங்கையிலிருந்து வெளியேறும் போது அதற்கு முன்பும், பின்பும் அவர்களுக்கு சொந்தமாக்கப்பட்டிருந்த காணிகளின் பெரும் பரப்பை பணம் படைத்த சிங்கள நிலப்பிரபுக்களும் பணம் படைத்த தமிழர்களில் சிலரும் சொந்தமாகவும் வாங்கினர்.

உண்மைகள் மேற்படி இருக்க மலைநாட்டு சிங்கள மக்களுக்கு சொந்தமான காணிகளைப் பிரிட்டிஷார் பறிமுதல் செய்தே பெருந்தோட்டங்களை ஆக்கினர் என்றும் பெருந்தோட்ட காணிகளை சிங்களவர்களுக்கு சொந்தமாக பங்கிட்டு கொடுப்பதன் மூலமே பிரிட்டிஷாரின் காலத்தில் சிங்கள விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு—காணிப் பறிமுதலுக்கு நட்டஈடு கொடுப்பதாக அமையும் என்ற கருத்தை திட்டமிட்டு சிங்கள மக்களின் மத்தியில் பேரினவாதிகள் ஸ்தாபித்து வருகின்றன.

பெருந்தோட்டச் செய்கையால்தான் மலையகத்து சிங்கள மக்கள் அவர்களது காணிகளை இழந்தனர் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானது. அப்படிக் கூறிக் கொண்டு மலையக சிங்கள மக்களின் காணிகளை பறிக்க பெருந்தோட்டங்களில் இருக்கும் மலையக மக்களே காரணம் அல்லது அவர்களின் வருகையால்தான் சிங்கள மக்கள் அவர்களது காணிகளை இழந்தனர் என்று கூறுவதும் சரியானதன்று.

அத்துடன் மலையக மக்களை பெருந்தோட்டங்களிலிருந்து விரட்டியடிக்கும் நோக்கில் பெருந்தோட்ட

நிலங்களை சிங்கள மக்களுக்கு பங்கீட்டு கொடுப்பதன் மூலம், கொடுக்க எடுக்கும் முயற்சிகள் அதற்கான அரசியல் நடவடிக்கைகள் என்பன இழந்த காணிகளை சிங்கள மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதாகவன்றி மலையக மக்களின் இருப்பிற்கு எதிரான திட்டமிட்ட நடவடிக்கைகளே ஆகும். 1970-77 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காணிச்சீர்திருத்தம் காணிப்பங்கீடு, தேசிய மயமாக்கல் நடைமுறைகள் என்பன மேற்படி திட்டமிட்ட நடவடிக்கைகளை அடிப்படை நோக்காக கொண்டதாகவே நடைமுறைப்படுத்தப்பட்டன.

1972ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்த சட்டத்தின் கீழ் உசவசம் நட்சா, ஜனவசம அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றது. இவற்றில் நட்சா நிறுவனத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட பெருந்தோட்டங்களில் மாற்றுப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் கண்டி, மாத்தளை மாவட்டத்தில் அதிகமான தோட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டன. இந்த மாற்றுப் பயிர்ச் செய்கையினால் தேயிலை, றப்பர் செய்கைகள் கைவிடப்பட்டன. தோட்டங்கள் மூடப்பட்டன. மாற்றுப்பயிர்ச் செய்கை திட்டத்தின்கீழ் மல்பரி வளர்ப்பும், பட்டுச் செய்கையும் சனல் செய்கையும் மேற்கொள்ளப்பட்டன. இம்மாற்றுப் பயிர்ச்செய்கையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. தோட்டங்கள் மூடப்பட்டன. தோட்டங்கள் மூடப்பட்டதால் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்தனர். இம்மாற்றுப் பயிர்ச்செய்கையினால் தோட்டத் தொழிலாளர்கள் வேலையில்லாதவர்களாக்கப்பட்டதுடன், வேலையில்லாமல் தோட்டங்களிலிருந்து வெளியேறினர். வெளியேற்றப்பட்டனர். இதுவரை ஒரு கூட்டமாக வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்கள் சிதைந்து

போகலாயினர். உசவசம நிறுவனத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட தோட்டங்களிலும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு குறைந்தது. ஏற்படும் புதிய வேலை வாய்ப்புகளில் கிராம சிங்களவர்கள் அமர்த்தபட்டனர். அவர்களை வேலையில் அமர்த்தவென புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவே வேலை செய்த தொழிலாளர்கள் வேலை நீக்கஞ் செய்யப்பட்டதுமுண்டு, இத்திட்டத்தின் கீழ் தோட்ட நிலங்களில் காடுகள் வளர்க்கப்பட்டன. அத்துடன் தோட்டக் காணிகள் கிராமத்து சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. 'பொக்கட் கொலணிகள்' என்ற பேரில் ஒரு தோட்டத்தின் எல்லையிலுள்ள பிரதான வீதியோரமுள்ள காணிகள் சிங்களவர்களுக்கு பகிர்ந்தளீக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதாவது தோட்டங்களை சுற்றி வளைத்தாற்போல் இந்த குடியேற்றங்கள் அமைந்தன.

ஜனவசம, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபணம் என்பவற்றின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட தோட்டங்கள் தோட்டங்களாக நடத்தப்பட்ட போதும் அவற்றிலும் சிங்களவர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு 'பொக்கட் கொலணிகள்' ஏற்படுத்தப்பட்டன. மேற்படி காணிப்பங்கீடுகள் எதிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. காணிப்பங்கீட்டாலும் தேசிய மயத்தாலும், காலம் காலமாக தோட்டங்களில் தொழிலாளர்களாக இருந்த தமிழ் தொழிலாளர்கள் பெருமளவில் வேலையிழந்தனர். அப்படி வேலையிழந்தவர்களுக்கு வேலை வழங்க எவ்வித மாற்றுத்திட்டமும் இருக்கவில்லை. வேலையுமில்லாமல் வசிப்பிடமும் இல்லாமல் அவர்கள் பட்டினியில் விடப்பட்டனர். இவ்வாறு விடப்பட்டவர்கள் தாங்களே வேலைத் தேடி வேறு தோட்டங்களுக்கு சென்றனர். கணிசமான தொகையினர் வேலை தேடி கிழக்கு மாகாணத்திற்கும்; வடக்கில்

கிளிநொசசி முல்லைததீவு, வவுனியா மன்னார் போனற பகுதிகளுக்கும் சென்றனர்.

பூண்டுலோயா பகுதியில் மிகவும் லாபம் தரக் கூடியதாக இருந்த பலபக்குணா, சொய்ஷி, வேவெண்டன். டன்சினன், சீன், கயப்புகல, மடக்கும்புர. ஹெரோ போன்ற தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் சுவீகரிக்கப்பட்டு காணிகள் பகிர்ந் தளிக்கப்பட்ட தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர் களின் போராட்டப் பாரம்பரியமுடைய மடக்கும்மர, டன்சினன், திஸ்பன், புஸ்ஸல்லாவை போன்ற தோட்டங் களும் அடங்கின. போர்க்குணமிக்க தொழிலாளர்கூட்டம் சிதைந்து போகவேண்டிய நிலையும் ஏற்பட்டது,

எனவே காணிச் சுவீகரிப்பு தோட்டத் தொழிலாளர் களை இன ரீதியாக மட்டுமன்றி வர்க்கரீதியாகவும் ஒடுக்கியது. காணிச்சுவீகரிப்பு தேசியமயம் போன்ற திட்டங்களில் தோட்டங்களில் செறிவாக வாழ்ந்த மலையக மக்கள் சிதறடிக்கப்பட்டனர்; வேலையில்லாது பொருளாதார ரீதியாக வக்கற்றவர்களாயினர்.

றப்பர் தோட்டங்களை பொறுத்தவரையில் கூடுத லாக சிங்கள மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட தனாலும், காணிப்பங்கீட்டு கொடுக்கப்பட்டதாலும் தமிழ் மக்கள் அடையாளம் இழந்தனர். அங்கு தொழிற் சங்கரீதியாக ஸ்தானப்பட்டிருந்த தமிழ் தொழிலாளர் களின் மத்தியில் சிங்கள தொழிலாளர்களை வேலைக் கமர்த்தி தமிழ் தொழிலாளர்களுக்கு எதிராக குறிப்பாக தமிழ் தொழிலாளர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க போராட்டங்களுக்கு எதிராக செயற்பட அவர்கள் திட்ட மிட்டு தூண்டப்பட்டனர். இதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் றப்பர் தோட்டங்களில் பலவீனமாக்கப் பட்டனர்.

தோட்டங்களில் குடியேறிய அல்லது வேலைக்கமர்த்தப்பட்ட சிங்களத் தொழிலாளர்களில் சிலர் பொலிஸசாரின் உதவியுடன் தமிழ் தொழிலாளர்கள் மீது காடைத்தனங்களை தொடர்ந்து புரிந்து வந்தனர்,

இந்நடவடிக்கைகளால் தமிழ் தொழிலாளர்கள் சுய அடையாளம் இழந்தது மட்டுமன்றி ஸ்தாபனப்படுத்தப்பட்ட தொழிலாள வர்க்கம் என்ற நிலைமையிலிருந்து தளர்ந்து போயினர்; தொழிற்சங்கப் பலமிழந்தவர்களாகவும் ஆக்கப்பட்டனர்.

மேற்கு மாகாணத்தில் இருக்கும் றப்பர் தோட்டங்களில் தமிழ் தொழிலாளர்கள் அதிகமாக அவர்களின் சுய அடையாளத்தை இழந்தனர். ஏனைய றப்பர் தோட்டங்களில் சிங்கள மக்களின் கட்டுப்பாட்டில், தயவில் வாழும் நிலையிலேயே காணப்படுகின்றனர். சிங்கள மொழியில் பேசுவது தொடக்கம் பிள்ளைகளுக்கு சிங்கள மொழி மூலம் கற்பித்தல் உட்படநடையுடை பாவனைகள்என்பனவற்றிலும் சிங்களப் பண்பாட்டின் ஆளுகைக்குட்பட்டனர்.

ஆனால் தேயிலை தோட்டங்களில் காணிப்பங்கீடு தேசியமயம் என்பவற்றினால் தமிழ் தொழிலாளர்கள் பலவித பாதிப்புக்குட்பட்ட போதும், அடக்குமுறைகளுக்கெதிரான போராட்டங்களுக்கூடாக தன்னடையாளங்களையும் தனித்துவத்தையும் பாதுகாத்து நிமிர்ந்து நிற்கின்றனர்.

1948 இற்கு பிறகு இந்திய வம்சாவளியினரை இந்தியாவுக்கு துரத்திவிட பலவித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கைக்கூடாதபடியால் அவர்

களில் சிறுதொகையினருக்கு (சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ்) பிரசாவுரிமை வழங்க வேண்டியநிலை ஏற்பட்டது. அதனால் சிறுதொகையினருக்கு வாக்குரிமையும் கிடைத்தது. இதனை அடுத்தும் இந்திய வம்சாவளியினர்–மலையக மக்கள் இலங்கை தேசியத்துக்குள்ளடக்கப்படாது பலவிதத்திலும் ஒதுக்கப்பட்டனர்.

இலங்கை பல்லின மக்களும் வாழும் நாடு என்பதை மறுக்கின்ற போக்கினால் மலையக மக்களின் தன்னடையாளங்களும், தனித்துவங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஆட்சியாளர்களுக்கு அக்கறையிருக்கவில்லை. அவர்களை ஒரு இணமாக வாழவிடாது பெரும்பான்மை சிங்கள மக்களுடன் கலந்து சுய அடையாளம் இழக்கவைக்க அரசியல் ரீதியாக திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது மலையக மக்கள் பெரும்பான்மை சிங்கள மக்களுடன் ஒருங்கிணைந்து ஐக்கியப்பட்டு வாழ்வதை மறுத்து அடையாளமற்று ஒன்று கலக்க வேண்டும் என்ற ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தோட்டங்களை தேசியமயமாக்கும் போதும், காணிப்பங்கீடு, தோட்டக் குடியேற்றங்கள் என்பவற்றைச் செய்யும் போதும் மேற்படி நோக்கை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கம் இயங்கியது என்ற முடிவுக்கு வரமுடியும்.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக மலையக மக்களிடமிருந்து எதிர்ப்புக்குரல்களும் போராட்டங்களும் எழுந்தன. 1970-77 காணிப்பங்கீடு தேசியமயமாக்கல், காணிச்சீர்திருத்தம் என்பன மலையக மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போதெல்லம் மலையக மக்கள் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

1977 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த தேர்தலில் மீண்டும் பதவிக்கு வர எண்ணம் கொண்ட சுதந்திரக்

கட்சி நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வீதியோரங் களிலுள்ள தோட்டக்காணிகளில் 7 ஆயிரம் ஏக்கர் காணியை சுவீகரித்து சிங்கள மக்களுக்கு பங்கீட்டுக் கொடுக்க முற்பட்டது. இதனால் தோட்டத் தொழி லாளர்கள் பெரிதும் பாதிப்படைவார்கள் என்பதால் தொழிற்சங்க பேதமின்றி சகல மலையக மக்களும் அம் முயற்சிக்கு எதிராக போராட்டங்களில் இறங்கினர். குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் பல எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த எதிர்ப்பையும் மீறி 11—5—1977 அன்று டெவன் தோட்டக்காணியை அளந்து ஒதுக்க வந்த அரசநில அளவையாளர்கள் தோட்டத் தொழிலாளர் களால் அடித்து விரட்டப்பட்டனர். அதன் பின் அவ்விடத்துக்கு பொலிஸாரின் உதவியுடன் மீண்டும் நில அளவையாளர்கள் அரச அதிகாரிகள் என்போர் சென்ற னர். அதனை எதிர்த்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிஸார் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் யொக்ஸ் போர்ட் தோட்டத்தை சேர்ந்த சிவனு லெட்சுமணன் என்ற இளைஞன் கொல்லப்பட்டான். இதனையடுத்து மலையகமெங்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங் களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர். ஆர்ப்பாட் டங்களில் ஈடுபட்டவர்களை பொலிஸாரும், குண்டர் களும் தாக்கினர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் தொழிலாளர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள், மாணவர்கள்போன்ற பலதரப் பட்டவர்களும் ஈடுபட்டனர். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவ, மாணவிகள் சிவனு லட்சுமணன் கொல்லப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். அட்டன் நகரில் அதை இடைமறித்த பொலி ஸாருடன் சேர்ந்து காடையர்களும் மாணவர்களையும்

மாணவிகளையும், ஆசிரியர்களையும் தாக்கினர். இதில் பலர் பலத்த காயங்களுக்குள்ளாயினர். பின்னர் பல மாணவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இவ்வாறான தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை அடுத்து 7 ஆயிரம் ஏக்கர் தோட்டக் காணியை சுவீகரித்து சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டத்தை அன்றைய அரசாங்கம் கைவிட்டது. சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை மிகவும் இக்கட்டில் போட்ட சில சம்பவங்களில் இப்போராட்டம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக மக்களின் வரலாற்றில் இப்போராட்டம் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் நாமெஸ்வியா போராட்டத்திற்குப் பிறகு மண்ணுக்காக நடைபெற்ற போராட்டமாகும்

மேற்படி காணிச்சுவீகரிப்பின் மூலம் மலையக மக்கள் செறிவாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தொகையான தொழிலாளர்களை வேலையற்றவர் களாக்கும், சமுதாயமாக வாழ்வதை சிதறடிக்கும் நிலை ஏற்படுவதை இப்போராட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்த முடிந்தது.

மலையக மக்களின் உயிர்வாழ்விற்கு அடிப்படையான பெருந்தோட்டங்களை சிங்கள மக்களுக்கு பிரித்து கொடுப்பதை தடுத்து நிறுத்திய இப்போராட்டத்தின் வளர்ச்சியாக தோட்டக்காணிகளை பிரித்துக் கொடுக்கும் போது மலையக மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. இந்த வளர்ச்சியை கொடுத்த அப்போராட்டம் மலையக தொழிற்சங்கப் போராட்டங்களிலிருந்து மிகவும் வித்தியாசமாக இருந்தது.

தேசியமயம், காணிச்சீர்திருத்தம் என்பவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டு அதாவது அவரது தோட்டங்களையெல்லாம் இழந்த இ. தொ. கா. தலைவர் தொண்டமான் அப்போராட்டத்தை தன்னை வளர்த்துக் கொள்ளவும், தான் வர்க்கரீதியாக சார்ந்திருந்த யூ.என்.பியை ஆட்சிக்கு கொண்டுவரவும் பெரிதும் பயன்படுத்தினார். நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு தான் வெற்றி பெறவும், மலையகமெங்கும் யூ.என்.பி வெற்றி பெறவும் மலையக மக்களின் வாக்குகள் தொண்டமானின் தலைமையில் திரட்டப்பட்டன. 1970-77 வரையிலான அரசாங்கத்தில் மலையக மக்கள் பெரிதும் அதிருப்தியுற்றிருந்ததால் யூ.என்.பிக்கு ஆதரவை கொடுத்தனர்.

1977ஆம் ஆண்டு தேர்தலில் யூ.என்.பி அமோக வெற்றி பெற்றது. தொண்டமான் யூ.என்.பி அரசாங்கத்தில் அமைச்சரானார். சில சலுகைகளை அவரால் பெறமுடிந்ததேயன்றி மலையக மக்களுக்கு எதிரான காணிப்பங்கீடு, திட்டமிட்ட குடியேற்றத்தை அவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அவர் எதிர்ப்பு தெரிவித்த போதும் யூ.என்.பி தோட்டக் காணிகளை சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளித்தே வந்தது. தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்கும் போது தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்திருந்தபோதும் தோட்டத் தொழிலாளர்களுக்கு யூ.என்.பி காணி வழங்கவில்லை. ஓரிரு இடங்களில் ஓரிரு இ.தொ.கா. ஆதரவாளர்களுக்கு காணி வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு மலையக மக்களுக்கு எதிராக காணிக் குடியேற்றம் நடைபெற்றது. மகாவலித்திட்டம் கொத்மலைத் திட்டம் என்பவற்றின் கீழ் பல தோட்டங்கள் நீரில் மூழ்கின அதனால் பாதிக்கப்பட்ட

தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித திட்டங்களும் இல்லை. அவர்கள் தாங்களாகவே வேறு தோட்டங்களுக்கு சென்று வேலையில் சேர்ந்தனர். மேற்படி திட்டங்களினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு திட்டமிட்டபடி தோட்டக் காணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. அவ்வாறு காணி வழங்கப்பட்ட தோட்டங்களிலிருந்து தமிழ் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். யூ.என்.பியில் மகாவலித் திட்ட காணி அமைச்சராகவிருந்த காமினி திசாநாயக்க தோட்டக் காணிகளை சிங்கள மக்களுக்கு பிரித்து கொடுப்பதிலும் தோட்டங்களில் சிங்கள குடியேற்ற கிராமங்களை அமைப்பதிலும் தீவிரம் காட்டினார்.

திஸ்பன, டம்பரகல, ஹராங்கல, நுகவல,தெனிஸ்ஸாகல, றொத்சைல்ட் , யெலபெந்த, டன்சினன் ஓனகல் லோயா, பேர்னலன்ட்ஸ், கெட்டபூளா, ஹெரோ, குயின்ஸ்பெரி, சீன், ஹல்கொல்ல, வடக்கு மடக்குப்புற, குருக்கோயா, தெற்கு மடக்குப்புற, சொய்ஷி ஆகிய தோட்டங்களில் கொத்மலை நீர்தேக்கத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்கி குடியேற்ற யூ.என்.பி அரசாங்கம் அமைச்சரவை தீர்மானதமொன்றை நிறைவேற்றியது. தொண்டமானின் எதிர்ப்பையும் மீறி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தோட்டக் காணிகளை பகிர்ந்தளிப்பதை தொழிலாளர்கள் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். எனினும் மேற்படி தோட்டங்களில் சில முற்றாகவும் சிலவற்றுள் கணிசமான ஏக்கர் காணிகளும் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமல்ல 1988ஆம் ஆண்டு மலையகத்தில் 14 ஆயிரத்து 710 ஏக்கர் காணியை சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்க அமைச்சரவை தீர்மானம் நிறை

வேற்றப்பட்டது. அமைச்சர் காமினி திசாநாயக்கவே அத்திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றார். சுவர்ணபூமி திட்டத்தின்படி கண்டி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் காணியும், மாத்தளை மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் காணியும், பதுளையில் 1200 ஏக்கர் காணியும் இரத்தினபுரியில் 1200 ஏக்கர், காணியும் பிரித்துக் கொடுக்கப்பட தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிராம விரிவுபடுத்தற் திட்டத்தின்கீழ் கண்டி மாவட்டத்தில் 400 ஏக்கர் காணி 800 பேருக்கும், மாத்தளையில் 500 ஏக்கர் காணி 250 குடும்பத்துக்கும், நுவரெலியாவில் 400 ஏக்கர் காணி 600 குடும்பத்தினருக்கும், பதுளையில் 25 ஏக்கர் 50 குடும்பத்துக்கும், இரத்தினபுரியில் 800 ஏக்கர் ஆயிரம் குடும்பத்தினருக்கும் பிரித்துக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் 400 ஏக்கரும் மாத்தளையில் 450 ஏக்கரும் நுவரெலியாவில் 400 ஏக்கரும் பதுளையில் 100 ஏக்கரும் இரத்தினபுரியில் 885 ஏக்கரும் பிரித்துக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

காணிச் சீர்திருத்த சட்டத்தின்படி கண்டி மாவட்டத்தில் 200 ஏக்கரும் மாத்தளையில் 400 ஏக்கரும் இரத்தினபுரியில் 1600 ஏக்கரும் சுவீகரிக்கப்பட்டு பிரித்துக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

ஆக 1988 ஆம் ஆண்டு கண்டியில் 2500 ஏக்கரும் மாத்தளையில் 2600 ஏக்கரும் நுவரெலியாவில் 2000 ஏக்கரும் பதுளையில் 2125 ஏக்கரும் இரத்தினபுரியில் 5485 ஏக்கரும் பகிர்ந்தளிக்கப்பட தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானங்கள் பெரும்பாலும் நிறைவேற்றப் பட்டன. அவற்றில் மலையக மக்களுக்கென காணிகள் வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல அரச காணிகளில் அத்துமீறி சட்ட விரோதமாக குடியேறியுள்ளவர் களுக்கும் 1988இல் உறுதிகள் வழங்கப்பட்டன. கண்டியில் 750 ஏக்கரில் குடியேறியிருந்த 2000 பேருக்கும், 2250 ஏக்கரில் குடியேறியிருந்த 1500 குடும்பங்களுக்கும் நுவரெலியாவில் 65 ஏக்கரில் குடியேறியிருந்த 150 குடும்பங்களுக்கும் பதுளையில் 200 ஏக்கரில் குடியேறி யிருந்த 200 குடும்பங்களுக்கும் இரத்தினபுரியில் 1500 ஏக்கரில் குடியேறியிருந்த 1500 பேருக்கும் காணி உறுதிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன.

இவ்வாறு அத்துமீறி குடியேறி சிங்கள மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்ட போதும் அத்துமீறி அரசாங்க காணிகளில் குடியேறிய (மலையக மக்களில் ஒரு சிலர் மட்டுமே அப்படி குடியேறினர்) மலையக மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படவில்லை; மறுக்கப்பட்டது. குறிப்பாக 1987இல் போகாவத்தையில் அத்துமீறி குடியேறியிருந்த மலையக மக்கள் யாவரும் பொலிஸாராலும், காடையர்களாலும் அடித்து விரட்டப் பட்டனர். பின்னர் அந்நிலங்கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வாறு பல சம்பவங்கள் நடந்துள்ளன. அத்துமீறி குடியேறியவர்களில் சிங்களவர் களுக்கு ஒரு நீதியும் மலையக மக்களுக்கு இன்னொரு நீதியும் புரியப்பட்டன.

அதுமட்டுமல்ல மலையகத்தில் பிரதான வீதிகளுக்கு அடுத்துள்ள தோட்டக் காணிகளை சிங்கள மக்களுக்கு பிரித்து கொடுக்க காமினி திஸாநாயக்க பல திட்டங்களை வகுத்திருந்தார். உதாரணமாக தலவாக்கொல்லை யிலிருந்து டயகம வரைக்குமான வீதியோரங்களில் தோட்டக் காணிகளில் சிங்கள மக்களை குடியேற்ற தீர்மானம் கொண்டிருந்தார்.

இவ்வித திட்டங்களில் பல அவ்வப்பகுதி மக்களின் எதிர்ப்பு போராட்டங்களினால் கைவிடப்பட்டன அல்லது ஒத்திப் போடப்பட்டன. மலையக மக்களுக்கும் காணி வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே அந்த எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றன. இப்போராட்டங்களில் றொத்சைல்ட், பீட்ரு, வடக்கு பூண்டுலோயா போன்ற தோட்ட மக்கள் நடத்திய போராட்டங்கள் குறிப்பிடத்தக்கன.

1979ஆம் ஆண்டில் நானுஓயா, தலவாக்கொல்லை ஓயா ஆகிய ஆற்றங்கரைகளில் ஹொலிரூட், பணியஸ்கல்பா, நானுஓயா தோட்டத் தொழிலாளர்கள் விவசாயம் செய்து வந்த காணியை கைவிடும்படி அரசாங்கத்தினால் கோரப்பட்டனர். அதனை எதிர்த்து மக்கள் போராடி விவசாயம் செய்யும் நிலங்களை தற்காத்துக் கொண்டனர்.

ஆனால் 1988ஆம் ஆண்டு தீர்மானப்படி தலவாக்கலை நீர்த்தேக்க திட்டத்தின்படி தலவாக்கொல்லை நகரமும் மேற்படி தொழிலாளர்கள் விவசாயம் செய்யும் காணியும் நீருக்குள் மூழ்கும் அபாயம் இருந்தது. அத்திட்டத்தை எதிர்த்தும் மக்கள் போராடுவதால் அத்திட்டம் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

இவ்வாறு தோட்டக்காணிக் குடியேற்றங்களாலும், தோட்டங்கள் தனியார் மயமாக்கலாலும் யூ. என். பீ. ஆட்சிக் காலத்திலும் மலையக மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

1994ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்படி காணிக்குடியேற்றங்களில் பெரிய மாற்றங்களை செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே மாத்தளை, கண்டி, பதுளை மாவட்டங்களில்

தோட்டக்காணிகளில் அல்லது தோட்டங்களில் காடாக விடப்பட்ட காணிகளில் பரவலாக சிங்கள மக்கள் அத்துமீறி குடியேறியுள்ளனர். அதேவேளை மலையக மக்கள் அத்துமீறி குடியேற முடியாதவாறு பொலிஸா ராலும், சில அரசாங்க பிரமுகர்களாலும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனால் அத்துமீறி குடியேறிய சிங்கள மக்களுக்கு மறைமுக ஆதரவும் ஊக்குவிப்பும் வழங்கப்பட்டுள்ளது. தோட்டத் தனியார் கம்பனிகளின் குத்தகைக் காலத்தை நீடித்து கொடுக்கவும் தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வேறு இடங்களைவிட மலையகத்தில் பேரினவாத போக்கு கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி பிரமுகர்களே தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர் என்பதும் அவர்கள் இந்த பேரினவாத போக்கிலிருந்து இலகுவில் விடுபடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இதனால் மலையக மக்கள் அவர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக (தேசிய ரீதியாக இருக்கும் முற்போக்கு சக்திகள் எனப்படுவோரின் ஆதரவிற்காக காத்திராமல்) ஏதாவது ஒரு வடிவில் போராட வேண்டிய நிலையில் விடப்பட்டுள்ளனர்.

## (ஈ) இன வன்முறைகளின் தாக்கம்

இலங்கையில் ஆட்சியில் இருந்த யூ. என். பி. சுதந்திரக் கட்சி ஆட்சிக்காலங்களில் இனவன்முறைகள் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டன. அவற்றில் 1956 ஆண்டு 'ஸ்ரீ' கலவரம், 1977 ஆண்டு வன்செயல், 1981 ஆண்டு வன்செயல், 1983 ஆண்டு யூலை வன்செயல், 1986 ஆண்டு வன்செயல் என்பன குறிப்பிடத்தக்கன. இதைத்தவிர இன வன்முறைகள்

பரவலாக நடந்துள்ளன. இன வன்முறைகள் நாட்டில் நிரந்தரமாக ஏற்படாது தடுப்பதற்கு இலங்கையை ஆண்ட எந்த அரசாங்கமும் உருப்படியாக நடவடிக்கைகள் எடுக்கவில்லை. யூ. என். பி. சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் இனவன்முறைகளை திட்டமிட்டு ஏற்படுத்த தேவைகள் இருந்துள்ளன. சுதந்திரக் கட்சி காலங்களில் இனவன்முறைகள் விரைவாக கட்டுப்படுத்தப்பட்டதற்கு உதாரணங்கள் இருந்த போதும் நாட்டில் இனவன்முறைகள் நிரந்தரமாக ஏற்படாதிருக்க அக்கட்சியும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கவில்லை...

அதாவது தமிழர்களின் இன்உரிமைப் போராட்டங்கள் அல்லது அரசின் இன அடக்குமுறைக்கு எதிரான தமிழர் தரப்பு நடவடிக்கைகள் உச்சமாக இருக்கின்ற போதெல்லாம் (சாத்வீத, தீவிரவாத நடவடிக்கைகள் அவை பிழையாக இருப்பினும் சரியாக இருப்பினும்) நாட்டில் இன வன்முறைகளை தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கங்கள் கட்டவிழ்த்து விட்டு வந்துள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தற்போதைய காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான இனக்குரோதம் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு வளர்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் நடைபெற்ற சமாதான முயற்சிகளில் முறிவு ஏற்பட்ட பிறகு பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களுக்கு எதிராக இனக்குரோதம் மோசமாக வெளிப்படுவதை அவதானிக்க முடிகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் புரியப்போவதாக கூறிக்கொண்டு அதனை நியாயப்படுத்த அரசாங்க

மும் அதன் நேச சக்திகளும் மேற்கொள்ளும் பிரசாரங்களால் தமிழ் மக்களுக்கு எதிரான குரோதம் மேலும் வளர்ச்சியடையவே வழியேற்படும். அதனால் தமிழ் மக்கள் மத்தியில் தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்கள் என்றே உணர்வே வளர்ச்சியடைகிறது.

இந்த இனவன்முறைகளாலும் இனமுரண்பாடுகளும் மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு அவர்கள் மத்தியில் தங்களை அந்த இனவன்முறைகளிலிருந்தும் இனமுரண்பாடுகளிலிருந்தும் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி தங்களை ஒரு தனியான சமூகமாக காத்து வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு ஸ்தாபிதமாகியுள்ளது.

நாட்டில் நடைபெற்ற இனவன்முறைகளால் மலையக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி இங்கு குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. ஆனால் 1983ஆம் ஆண்டு யூலை கலவரத்துக்குப் பிறகு மலையக மக்கள் மத்தியில் தேசிய இன உணர்வு மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

1983ஆம் ஆண்டு யூலை இனவன்செயல்களுக்குப் பிறகு நாம் இந்நாட்டில் பாதுகாப்பாக வாழமுடியாது என்று மலையக மக்களில் பெரும்பான்மையானோர் இந்தியாவுக்கு குடிபெயரந்தனர், சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு குடிபெயர இந்திய பாஸ்போர்ட் பெற்று செல்வதை தாமதப்படுத்தி வந்தவர்களும் நாடற்றவர்களாக இருந்தவர்களில் கணிசமானோரும் மட்டுமன்றி சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை பிரசாவுரிமை பெற்றிருந்தவர்களில் பெரும்பாலானோரும் அவற்றை இரத்து செய்து கொண்டு இந்தியாவுக்கு குடிபெயர்ந்தனர்.

குறிப்பிட்ட தொகையினர் நாட்டின் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு சென்று குடியேறினர்.

மேற்படி இரண்டு விதங்களிலும் மலையகத்தி லிருந்து குடிபெயர்ந்த போதும் எல்லோரும் அவ்வாறு குடிபெயர்ந்து நடைமுறை சாத்திய மில்லாததால் பெரும்பாலானோர் மலையகத்திலும் வடக்கு கிழக்கிற்கு வெளியிலுமோ தொடர்ந்தும் இருக்க வேண்டி வந்தது. அவர்களிடம் நாங்கள் இந்நாட்டுப் பிரஜைகள், இது நமதுநாடு, இது நமது பிரதேசம் என்ற உணர்வும், நம்மை நாம் இனவன்முறைகள், இன அடக்குமுறைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண் டும் என்ற எண்ணமும் மேலோங்கியது.

1983யூலை இனக்கலவரத்தையடுத்து வடக்கு கிழக்கு தீவிரவாத தமிழர் இயக்கங்கள் மலையகத்தில் மேற் கொண்ட, மலையக மக்கள் மத்தியில் மேற்கொண்ட பிரசாரங்களினாலும் மலையக தேசிய இன உணர்வு தீவிரமடைய வாய்ப்பானது. சில தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் மலையகத்தில் ஆள்திரட்டின. சில மலை யகத்தையும் தனிநாட்டின் ஒரு பகுதியாக கொண்டு வேலை செய்தன. சில மலையகத்திற்கென தனியான தீவிரவாத இயக்கங்களை அமைக்க உதவின. சில அமைப்புகள் மலையக மக்களை வடக்கு கிழக்கில் சென்று குடியேற தூண்டின.

இந்த நடவடிக்கைகள் யாவும் வெற்றியளிக்கவில்லை. எனினும் மலையக தேசிய இன உணர்வும், இன அடக்கு முறைக்கு எதிரான போராட்ட உணர்வும் மலையக மக்களிடம் தீவிரமடைய வடக்கு கிழக்கு தமிழ் தீவிர அமைப்புகளின் நடவடிக்கைகள் (நேரடியாக இல்லா விடினும்) குறிப்பிட்டளவு செல்வாக்கு செலுத்தியுள்ளன.

1983 யூலை கலவரத்திற்கு அடுத்து மலையகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட மலையக மக்களுக்கு எதிரான இனவன்முறைகளை மலையக மக்கள் எதிர் கொண்டு திருப்பித் தாக்கியுள்ளனர்.

1986ஆம் 1989ஆம் ஆண்டுகளில் பூண்டுலோயா, தலவாக்கொல்லை, பகவந்தலாவை ஆகிய இடங்களில் தோட்டத் தொழிலாளர்களும், இளைஞர்களும் இனவன் முறையாளர்களை திருப்பித் தாக்கி தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இத்தற்காப்பு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டு ஆயுதபாணிகளால் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் மேலெழுந்தவாரியாக மக்களே முன்நின்று தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கினர்.

இந்த தற்காப்பு நடவடிக்கைகள் வெற்றியடைந்த தால் மலையக மக்களுக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளன. இவை மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தின் ஒரு படியாக அமையலாம்.

# III

## மலையக மக்கள் என்போர் யார்?

இலங்கையின் ஆயிரம் அடி உயரத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பில் அதாவது மலைநாட்டில் பெருந்தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளி தோட்டத்தொழிலாளர்களையே 'மலையக மக்கள்' என்று அடையாளம் காணப்படுவதாக சிலர் கூறுகின்றனர்.

இவர்களைவிட பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனியாக இலங்கை இருந்த காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கு கூலிகளாக கொண்டு வரப்பட்ட அல்லது இந்தியாவிலிருந்து இங்கு வந்த தமிழர்கள் மேல், தென், வடமேல் மாகாணங்களில் வாழ்கின்றனர்.

மேலும் 1977, 1983 இனவன்முறைகளை அடுத்து மலையகத்திலிருந்து கணிசமான மக்கள் வடக்கு கிழக்கிற்கு சென்று வாழ்கின்றனர். மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி மக்களைப் போன்று ஏனைய இடங்களில் வாழ்கின்ற இந்தியவம்சாவளி மக்கள் செறிவாக வாழாவிடினும் அவ்விடங்களில் எல்லாம் தங்களை ஒரு வித்தியாசமான இனச் சமூகமாக அடையாளம் காட்டி நிற்கின்றனர். இவர்கள் தமிழ் மொழியை பேசினாலும் தங்களை இலங்கை தமிழர்கள் என்று பதிவு செய்து கொண்டிருந்தாலும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிலிருந்து வேறு ஒரு சமூகமாகவே அடையாளம் காட்டி நிற்கின்றனர்.

இதைவிட மலையகத்திலிருந்து வேறு இடங்களிற்கு குடிபெயர்ந்து மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட வர்களும் இருக்கின்றனர். பிரிட்டிஷாரின் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து வடக்கு கிழக்கிற்கும், மலையகத்திற்கும் வெளியில் வாழ்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களும் வடக்கு கிழக்கு தமிழர்களுடன் அடையாளம் காணப்படுவ தில்லை.

வடக்கு கிழக்கிற்கு வெளியிலும், மலையகத்திற்கு வெளியிலும் மலையகத்திலும் வாழும் வடக்கு கிழக்கு மக்களுடன் இணைந்து அடையாளம் காணப் படாதவர்கள் பொதுவாக இந்தியர்கள் என்றே அடை யாளம் காணப்படுகின்றனர். மலையகத்திலிருந்து வடக்கு கிழக்கிற்கு சென்று குடியேறியுள்ளவர்களும் இந்திய தமிழர்கள் என்றே அடையாளம் காணப்படு கின்றனர்.

இவ்வாறு இந்தியத் தமிழர்கள் என்று அடையாளம் காணப்படும் அனைவருக்கும் எதிராக மேற்கொள்ளப் பட்டு வருகின்ற அடக்குமுறை வடிவங்களுக்கும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படு கின்ற அடக்குமுறை வடிவங்களுக்கும் அவற்றுக்கு எதிரான போராட்டங்களுக்குமிடையில் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன.

இன ஒடுக்கலுக்கு எதிராக காணப்படும் தீர்வு நடவடிக்கைகளிலும் கூட வித்தியாசங்கள் இருக்கும். ஏனெனில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கு இணைந்த பிரதேச சுயாட்சியோ சமஷ்டியோ தீர்வாக அமையுமாயின் அந்த அமைப்பிற்குள் வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் மேற்படி மக்களின் பிரச் சினைகளுக்கு தீர்வு காண முடியாது

மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களும் ஏனைய இந்திய தமிழர்களும் ஏனைய இடங்களில் வாழும்

இந்திய வம்சாவளியினரும் ஒரே இனச்சமூகமாகவே இன மாகவே அடையாளம் காணப்படுகின்றனர். அதனால் இவர்கள் யாவரும் ஓரே .பெயரில் அழைக்கப்படுவதில் எவ்விதத் தவரும் இருக்க முடியாது.

தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சகலரும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்றே அழைக்கப்பட வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயமும், எல்லோரையும் மலையக மக்கள் என்றே அழைக்கப்பட வேண்டும் என்று இன்னொரு அபிப்பிராயமும் நிலவுகின்றது.

இந்திய வம்சாவளியினர் என்று அழைக்கப்பட வேண்டும் என்று கூறுவோர் மலையக மக்கள் என்பது மலையகத்தில் இருப்போரை மட்டுமே குறிக்கும் என்ப தால் இந்திய வம்சாவளியினர் என்றே எல்லோரும் அழைக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.

இதைவிட மலையகத்தில் இருப்போரை மலையக மக்கள் என்றும் ஏனைய இடத்தில் இருப்போரை இந்திய வம்சாவளியினர் என்றும் அடையாளம் காணபபட வேண்டும் என்ற இன்னொரு கருத்தும் நிலவுகின்றது.

மலையகத்திற்கு வெளியிலுள்ள இந்திய வம்சாவளி யினர் மலையகத்தில் வாழ்வோரை விட இன்னொரு சமூகமாக அடையாளம் காணப்பட போதியளவு செறி வாகவோ அரசியல் ரீதியாக சக்தி படைத்தவர்களாகவோ இல்லாதிருப்பதுடன் இன்னொரு வித்தியாசமான சமூக மாக அடையாளம் காணப்படக்கூடிய வெளிப்பாடுகளும் இல்லாதிருக்கின்றனர். இந்திய தமிழர்கள் என்று பொது வாக அடையாளம் காணப்படுவதனால் இன்னொரு வித்தியாசமான சமூகமாக அடையாளம் காணவேண்டிய அவசியம் எழவில்லை. ஆகவே மலையக மக்கள் என்றும்

இந்திய வம்சாவளியினர் என்றும் இரண்டாக அடையாளம் காணப்படமுடியாது.

எனவே மலையகத்தில் வாழ்வோர் உட்பட சகல இந்திய வம்சாவளியினரும் ஒரே இனச் சமூகமாகவே அடையாளம் காணப்பட வேண்டியுள்ளனர்.

அவ்வாறெனின் அவர்களை இந்திய வம்சாவளியினர் என்றழைப்பதா? மலையக மக்கள் என்றழைப்பதா?

மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டக்காட்டான் என்றும் இந்தியத் தொழிலாளர் என்றும் அழைக்கப்பட்டனர். அவர்களை இந்தியர்கள் என்றழைப்பது அவர்களை அந்நியர்களாகப் பிரித்துக் காட்டுவதாக அமைவதால் அப்பதம் வெறுத்து ஒதுக்கப் பட்டது. அவர்களும் இந்நாட்டுப் பிரஜைகளாக மதிக்கப் பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே அவர்களை மலையக மக்கள் என்று அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. இங்கு மலையக மக்கள் என்பது முற்போக்காகவே கொள்ளப்படுகிறது.

எனவே மலையகத்தில் வாழ்வதானலன்றி இந்தியர்கள் என்று அந்நியப்படுத்தப்படக்கூடாது என்பதற்காகவே மலையக மக்கள் என்பது வழக்கத்திற்கு வந்தது.

ஏனைய பிரதேசத்தில், இருப்பவர்களும் கூட இந்தியர்கள் என்று அழைக்கப்படுவதனால் அந்நியப் படுத்தும் தன்மையே மேலோங்கும். அவர்களும் இந் நாட்டுப் பிரஜைகளாகவே அடையாளம் காணப்பட வேண்டும்.

அந்த அடிப்படையில் அவர்களும் மலையக மக்கள் என்று அழைக்கப்படுவதே முற்போக்கானதாகும்.

இலங்கையில் இந்திய வம்சாவளியினரின் வரலாற்றை ஆராய்ந்தால் இந்தியர்கள் என்ற ரீதியில் அவர்கள் யாவரும் ஒடுக்கப்பட்டு வந்தமையை காணமுடியும். அந்த அடக்குமுறைகள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளதை அவதானிக்க முடியும்.

அந்த அடக்குமுறைகளுக்கு எதிராக ஒழுங்கமைக்கப் பட்டவர்களாக முனைப்பாக திரண்டிருப்பவர்கள் மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களே ஆவர். இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளும் இதற்கு எதிரான தீர்வும் வித்தியாசமாக இருப்பதனால் முழு இந்திய வம்சாவளியினரினது இனரீதியான பிரச்சினை களுக்கு தீர்வு காண முழு இந்திய வம்சாவளி மக்களும் ஐக்கியப்பட்டு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை நமது நாடு, மலையகம் நமது பிரதேசம், நாம் ஒரு இனச்சமூகம் என்ற தேசிய இன உணர்வு வளர்ச்சியடைந்துள்ளது. அந்த தேசிய இன உணர்விற்கு உரம் சேர்ப்பது போல் மலையகத்திற்கு வெளியில் இருக்கும் இந்திய வம்சாவளியினரின் உணர்வும் இணைக் கப்படவேண்டும். எனவே மலையக மக்கள் என்பதில் பின் வருவோர் உள்ளடக்கப்படலாம்.

1. மலையகத்தில் நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு அங்கேயே வாழும் தோட்டத் தொழிலாளர்களை உள்ளடக்கிய சகல இந்திய வம்சாவளி மக்களும்

2. மலையகத்திலிருந்து வெளியேறி மலையகத்திற்கு வெளியில் வாழ்ந்து கொண்டு மலையகத்தையே நிரந்தர வசிப்பிடமாகக் கொள்ளும் இந்திய வம்சாவளியினர். தொழில் காரணமாக மலையகத்திற்கு வெளியில் வசிக் கின்ற இளம் தலைமுறையினர் கணிசமான அளவினர் இருக்கின்றனர். இவர்களை தோட்டங்களின் நிரந்தர வாசிகளாக தோட்டத் துரையோ, அப்பகுதி கிராம

சேவகரோ கணிப்பதில்லை. அதன் காரணமாக மலையகத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். மலையகத்தில் வாக்காளராக பதியவோ, மலையக விலாசத்தில் அடையாள அட்டைப் பெற முடியாதவர்களாகவோ இருக்கின்றனர்.

அதே வேலை மலையகத்தில் வெளியில் வசிக்குமிடத்திலும் அவர்களுக்கு நிரந்தர வசிப்பிட உரிமை மறுக்கப்படுகின்றது. அவர்கள் மலையகத்தை அவர்களது நிரந்தர வசிப்பிடமாக வென்றெடுக்க வேண்டியுள்ளனர்.

3. மலையகத்திலிருந்து வெளியேறி மலையகத்திற்கு திரும்ப முடியாத, திரும்ப விருப்பமில்லாத ஆனால் இந்திய வம்சாவளி என்ற அடையாளத்துடன் வாழ்பவர்கள்.

ஜேர்மானிய வழக்கப்படி ஒரு மனிதன் எந்த இடத்தில் வசித்தாலும் ஒரு இடத்திற்கு செல்லும் போது மற்ற எல்லா இடங்களில் இருப்பதைவிட மேலான மகிழ்ச்சியை அனுபவித்தால் அதுவே அவனது தாயகமாகும்.

இந்த மூன்றாவது பிரிவினர் மலையகத்திற்கு வெளியில் இருந்தாலும் மலையகத்திற்கு செல்லும் போது அளவில்லாத மகிழ்ச்சி அடைவதால் அவர்களின் தாயகம் மலையகமே.

4. வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் அடையாளம் காணமுடியாத வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும், மலையகத்துடன் சம்பந்தமில்லாத ஆனால் இந்திய வம்சாவளியினர் என்ற பொது அடையாளத்துடன் அல்லது அடக்குமுறைகளை எதிர்த்து போராடி தீர்வு காண மலையக மக்களில் ஒரு பிரிவினராக அடையாளம் காணப்பட வேண்டியவர்களாவர்.

வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழ்கின்ற இந்திய வம்சாவளியினர் அவர்களுடைய பிரதேசம் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையே காணப்படுகின்றது. நவீன பேரின அடக்குமுறைகளில் மிகவும் முக்கியமானது ஒரு இனத்துக்கென இருக்கும் பிரதேசத்தை அந்த இனத்துக்கு மட்டும் உரிய பிரதேசமாக தொடர்ந்து இருக்கவிடாமல் பேரினவாத குடியேற்றங்கள் போன்றவற்றை செய்வதாகும். மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கென ஒரு பாரம்பரிய பிரதேசம் இல்லை. மாறாக பிரதேசங்கள் புவியியல் தொடர்ச்சியற்று காணப்படினும் ஒரு பிரதேசத்தை அடையாளம் காண முடியும். அப் பிரதேசத்தில்கூட எதிர்காலத்தில் நுவரெலியா மாவட்டம் மட்டுமே எஞ்சுமோ தெரியாது.

எனினும் பிரதேசமில்லாமல் ஒரு இனம் இருப்பினும் அதனை ஒரு இனமாக அடையாளம் காண்பதும், அதன் மிதான இன ஒடுக்கலுக்கு எதிராக, அதனது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட வேண்டியதும் அவசியமாகும்.

பொதுவாக தெற்கு, மேற்கு, வடமேல் மாகாணம் போன்ற இடங்களில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களை இப்பரிவில் அடக்கலாம். வடமேல் மாகாணத்தில் வாழ்பவர்கள் பொதுவாக மலையகத்துடன் தொடர்பற்றவர்களாக இருப்பினும், இவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று பதிவு செய்யப்பட்டிருப்பினும் இவர்கள் வடக்கு கிழக்கு தமிழர்களுடன் இனம் காணப்படவில்லை. இவர்களின் நிரந்தர வசிப்பிடம் வடக்கு கிழக்கு அல்ல. அதேவேளை மலையகமும் இவர்களது நிரந்தர வசிப்பிடமல்ல. ஆனால் இவர்கள் பொதுவாக இந்திய வம்சாவளி தமிழர்கள் என்றே அடையாளம் காணப்படுகின்றனர்.

வடமேல் மாகாணத்தில் இருக்கும் தமிழர்கள் யாவரும் வடக்கு கிழக்கு தமிழர்களைப் போன்று நீண்ட

வரலாறு கொண்டவர்களல்லர் அவர்களுக்கு பிற்பட்ட காலத்தில் இந்தியாவிலிருந்து வந்தவர்களாவர். தென்னந் தோட்டங்களில் வேலை செய்ய வந்தவர்களும் இருக்கின்றனர். இவர்கள் வடக்கு கிழக்கு தமிழர்களைப் போலன்றி இந்திய தமிழர்களின் கலாசாரப் பண்பாட்டையே பெரிதும் தழுவுகின்றனர்.

பேரினவாத அடக்கு முறைகளிலிருந்து விடுபடுவதற்கான போராட்டத்தில் அடக்கப்படும் ஒரே மொழியைப் பேசும் ஒரு மக்கள் கூட்டத்தை தொகையில் சிறியதெனினும் அநாதைகளாக விட்டுவிடமுடியாது. அவர்களுக்கென தனித்தனியான அல்லது பலதேசிய இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவும் முடியாது.

பேரின அடக்குமுறைக்கு எதிராக ஒரே மொழியை பேசும் வடக்கு கிழக்கு தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள் என்போர் ஒரே தேசிய இனமாக அடையாளம் காணப்பட முடியாமையும் அம்மக்களின் போராட்டம் ஒருமுனைப்பட்டதாக இல்லாதிருப்பதும் திருப்தி தருவதாக இல்லை. அதிலும் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்று அடையாளம் காணப்படும் அனைவரும் ஒரு இனச் சமூகமாக அடையாளம் காணப்படாமல் விடுவது இன்னும் ஆரோக்கியமற்றதாகவே இருக்கும். இந்திய வம்சாவளி தமிழர்கள் வெவ்வேறான இனமாக அடையாளம் காணப்பட எவ்வித தேவையும் ஏற்பட்டு விடவில்லை.

5 வடக்கு கிழக்கிலே இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளத்துடன் வாழும் (மலையகத்திலிருந்து குடி பெயர்ந்து) ஒரு இனச் சமூகமாக வாழ்வோர்.

ஒரே மொழியை பேசுவதாலும் வடக்கு கிழக்கில் வாழ்வதாலும் வடக்கு கிழக்கு தமிழர்களாக அவர்கள்

வாழ்வதில்லை. வடக்கு கிழக்கில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள் சமமாக மதிக்கப்படுவதுமில்லை. அவர்கள் வடக்கு கிழக்கு தமிழர்களிலிருந்து வேறுபட்டு பல வித்தியாசங்களுடன் பல அடக்கு முறைகளுக்குட் பட்டுத் தனியான ஒரு இனச் சமூகமாகவே பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர்.

இந்நிலையில் வடக்கு கிழக்கு மக்களுடன் முரண் பாடற்ற வகையில் அங்கு வாழும் இந்திய வம்சாவளி யினரின் உரிமைகளை உறுதி செய்ய விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எனவே அவர்களும் மலையக மக்கள் என்றே அழைக்கப்பட வேண்டும்.

இதைவிட சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப் படையில் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டவர்கள் மீண்டும் இலங்கைக்கு அழைக்கப்பட வேண்டும் எனவும் அவர்களும் மலையக மக்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற அரசியல் கோரிக்கையும் முன்வைக்கப் பட்டு வருகிறது.

மேலும் இந்தியாவிலிருந்து இங்கு வந்து மலையகத் திலும், மன்னார் பகுதிகளிலும் இந்திய முஸ்லீம்கள் என்ற அடையாளத்துடன் வாழும் முஸ்லீம்களும் இந்திய வம்சாவளி மக்கள் என்பதனுள் அடக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் தற்போது அவர்களிடம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இலங்கை வாழ் சகல இந்திய வம்சாவளியினரும் மலையக மக்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்பத னால் அவர்கள் எல்லோரும் மலையகத்திற்கு சென்று குடியேறி வாழ வேண்டியதில்லை. மலையகத்தில் வாழும்

இந்திய வம்சாவளியினர் கூட அங்கு வாழ்வதாலும் வீடு, நிலம், கிராமம் எதுவுமற்ற, நிரந்தர விலாசமற்ற கூட்ட மாகவே வாழ்கின்றனர்.

சகல இந்திய வம்சாவளியினரும் மலையக மக்கள் என்ற பொது அடையாளத்துடன் அவர்கள் வாழும் அவ்வப் பகுதிகளில் அவர்களின் இன உரிமைகளை உறுதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

# IV

# மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம்

மலையக மக்கள் — இந்திய வம்சாவளியினர் தமிழ் மொழியைப் பேசினாலும் அவர்கள் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிலிருந்து ஒரு வித்தியாசமான இனச்சமூகமாகவே அடையாளம் கொண்டிருக்கின்றனர். இவர்களின் கலாசாரம் பழக்கவழக்கங்கள் பொருளாதார நிலை என்பவற்றில் வித்தியாசமான தன்னடையாளங்களையும், தனித்துவங்களையும் கொண்டிருக்கின்றனர்.

மலையக மக்கள் இந்திய வம்சாவளியினர் இலங்கையின் சனத்தொகையில் 7 சதவீதத்தினராவார். மலையக மக்கள் — இந்திய வம்சாவளியினரில் ஏறக்குறைய 80 சதவீதத்தினர் தோட்டத் தொழிலாளர்களாவர்.

வடக்கு கிழக்கு தமிழர்கள், முஸ்லீம்கள், மலையக மக்கள் என்போர் தமிழ்மொழி பேசும் இனம் என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்து பேரின அடக்குமுறைக்கெதிராக போராட்டத்தை முன்னெடுக்க வாய்ப்புகள் இருந்த போதும் தமிழ் தலைமைகளின் தவறுகளின் காரணமாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்துடன் மலையக மக்களினதும் முஸ்லீம் மக்களினதும் உரிமைப் போராட்டங்கள் இணைக்கப்படவில்லை.

1948 இற்கு முன்பும், பின்பும் இந்திய வம்சாவளியினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அடக்குமுறைகளுக்கு எதிராக போராட வேண்டியதும் இன உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டியதும் அவசியமாகியுள்ளது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக சமஷ்டியோ, பிரதேச சுயாட்சி அமைப்போ அமைக்கப்பட்டால் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளுக்கு அந்த சமஷ்டியில் அல்லது பிரதேச சுயாட்சி அமைப்பில் தீர்வு காணப்பட முடியாது.

எனவே தீர்வின் அடிப்படையிலும் மலையக மக்கள் ஒரு தனியான இனச்சமூகமாக அடையாளம் காணப்பட வேண்டும்.

இவர்கள் தனியான இனச்சமூகமாக கருத முடியாது என்று தேசிய இனத்திற்கான பாரம்பரிய வரைவிலக்கணத்தை உயர்த்திப் பிடிப்பவர்கள் கருதுகின்றனர்.

தோழர் ஸ்டாலினின் வரைவிலக்கணப்படி ஒருமக்கள் கூட்டத்திற்கு தனியான மொழி, பண்பாடு, பிரதேசம், பொருளாதாரம் என்பன இருக்க வேண்டும். அப்போதே அம்மக்கள் ஒரு தேசிய இனமாக கருதப்படுவர். இக்கோட்பாடு முன்வைக்கப்பட்ட சூழ்நிலையில் ஒரு பிரதேச தொடர்புடைய தேசமாக இருக்கக் கூடியதாக இருந்தது. இன்று ஒரே இனத்தவரை மட்டும் கொண்ட ஒரு தேசத்தை காணமுடியாதுள்ளது. அன்றைய சூழ்நிலையில் இன அடக்குமுறைக்கு எதிராக இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டும் என்றும் சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசம் பிரிந்து போவது மட்டுமே என்றும் கொள்ளப்பட்டது.

இன்று ஒரு இனம் ஒரு தேசமாக பிரிந்து போக முடியாதவாறு தொடர்ச்சியான பிரதேசமில்லாது ஏன்

சமஷ்டி ஆட்சியொன்றை ஏற்படுத்த முடியாதவாறும்கூட இனங்கள் பரவலாக வாழ்கின்றன. அவற்றின் மீது மேற்கொள்ளப்படும் இன அடக்குமுறைகளுக்கு எதிராக போராட்டங்களும் தீர்வுகளும் தேவையே. அந்த வகையில் பிரதேச ரீதியாக தொடர்ச்சியாக வாழாத, தேசமாக பிரிய முடியாத இனத்திற்கும் சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. அந்த சுயநிர்ணய உரிமை அம் மக்கள் தேசமாக பிரிய முடியாது என்பதற்காக மறுக்கப் படமுடியாது. ஒரு இனத்திற்கு திட்டமிட்ட பிரதேசம் இல்லாமல் இருக்கும் போது அதன் உரிமைகள் நசுக்கப் படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பிரதேசம் தொடர்ச்சியாக இல்லாத அல்லது பிரதேசம் இல்லாத இனத்தினது சுயநிர்ணய உரிமையை சுயாட்சி பிரதேசங்கள், சுயாட்சி உள்ளமைப்புகள், சுயாட்சி உப உள்ளமைப்புகள் என்பவற்றை ஏற்படுத்து வதன் மூலம் உறுதி செய்ய முடியும்.

அந்த வகையில் மலையக மக்கள் பரந்து வாழ்வதாலும் ஒரே தொடர்ச்சியான பிரதேசத்தில் வாழாதபடியாலும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இல்லை என்ற அடிப்படையில் மலையக மக்களை தனியான இனம் இல்லை என்று சிலர் கூற முற்படுவது சரியன்று.

எனவே தேசிய இனம் பற்றிய பாரம்பரிய வரைவிலக்கணம் அடிப்படையில் தேசத்திற்கான வரைவிலக்கணமாகவே தற்போது கொள்ளப்படுகின்றது. அந்த வரைவிலக்கிணத்தைக் கொண்டு தேசிய இனங்களை வகைப் படுத்த முடியாது. இன்று தேசங்களினதும் தேசிய இனங்களினதும் வரைவிலக்கணங்கள் வேறுபட்டே இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

தேசிய இனம் பற்றிய கருத்தை தற்கால வளர்ச்சியின் படி ஒரு இனச்சமூகம் இன்னொரு சமூகத்தினரால்

அடக்கபபடும்போதும் ஒரு வேறுபட்ட சமூகமாக வெளிப் படுவதை அல்லது வளர்வதை கண்டு அஞ்சும்போது அந்த இனத்திற்கு தனியான இனம் என்ற அங்கீகாரம் கிடைக் கின்றது.

மலையக மக்களும் பேரினவாதிகளால் விஷேடமான சூழ்நிலைகளில் அடக்கப்படுவதாலும் அவர்களின் வளர்ச்சியை கண்டு அஞ்சுவதன் மூலமும் மலையக மக்கள் ஒரு தனியாக இனமாக அங்கீகரிக்கப்படுகிறார்கள் எனலாம்.

இவ்வாறு தனியான ஒரு இனச்சமூகமாக அடை யாளம் காணப்படும் மலையக மக்களை ஒரு தனியான தேசிய இனம் என்று அழைக்க வேண்டும் என்றும் ஒரு தனியான தேசிய சிறுபான்மை இனம் என்று அழைக்க வேண்டும் என்றும் இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. இவர்களை தனியான தேசிய இனம் என்பவர்கள் தோழர் ஸ்டாலினின் வரைவிலக்கணப்படி பார்த்தாலும் இவர் களுக்கென தனியான மொழி, தனியான கலாசாரம், தனியான பிரதேசம், தனியான பொருளாதாரம் என்பன இருப்பதாக கூறுகின்றனர்.

இவர்களை தேசிய சிறுபான்மை இனமாக கொள் பவர்கள் மேற்படி ஸ்டாலின் வரைவிலக்கணத்தை ஒரு இனத் தேசியத்திற்குரியதாக கொண்டு அது மலையக மக்களுக்கு பொருந்தாது என்றும் ஆனால் மலையக மக்கள் ஒரு தனியான தேசிய சிறுபான்மை இனமாக அடையாளம் காணப்படலாம் என்றும் கூறுகின்றனர். சிறுபான்மை இனங்களின் உரிமைகள் தொடர்பாக ஆராய்ந்த ஐக்கிய நாடுகள் சபையின் உபகுழுவின் கருத் துப்படி 'உறுதியான, இன, மத அல்லது மொழி இயல் புகளை கொண்டு அங்கு வாழும் ஏனைய மக்களிடமிருந்து வேறுபட்டிருப்பதோடு அவற்றை பாதுகாக்கவும் விரும்பும்

ஆக்கிரமிப்பு செலுத்தாத மக்கள் கூட்டம் சிறுபான்மை இனம்' ஆகும்.

இனம், தேசியம், மதம் அல்லது மொழி என்பனவற்றினால் ஒரே மக்கள் கூட்டத்தில் ஏனையவர்களிடமிருந்து வேறுபட்ட மக்கள் கூட்டம் என அவர்கள கொள்வார்களாயின் அந்த இனம் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்று அழைக்கப்படலாம் என்று ஆன்ளட் எம். றோஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதைவிட பொதுவான பண்புகளை கொண்ட ஒரு மக்கள் கூட்டம் தம்மைத் தாமே ஒரு சிறுபான்மை இனம் என்று கொள்ளுமாயின் அது ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்றும் நவீன கருத்துக்கள் எடுத்துக் கூறுகின்றன.

எது எவ்வாறிருப்பினும் மலையக மக்களை ஒரு தனியான தேசிய இனம் என்று கொள்ளப்படுவதற்கு தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளை முதன்மைப் படுத்தாது அவர்கள் வாழ்கின்ற பிரதேசம் வளர்ச்சிப் போக்கு போராட்டப்பாதை என்பவற்றை கருத்திற் கொண்டு அவர்களை ஒரு தேசிய சிறுபான்மை இனமாக கொள்ளுதலே தற்போதைக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

மலையக மக்கள் ஒருபிரதேச தொடர்ச்சியற்று பரந்து வாழ்வதுடன் பெரும்பான்மை சிங்கள மக்களிடையேதான் வாழ்கின்றனர். பெரும்பான்மையின மக்களிடையே பேரினவாத கருத்துக்கள் பெரிதும் செல்வாக்கு பெற்றுள்ளதென்றும், அவர்களின் ஆதரவின்றி மலையக மக்களின் போராட்டங்கள் வெல்லுவது கடினம் என்பதன் அடிப்படையிலும் மலையக மக்களின் சார்பில் அரசியல் போராட்டங்கள் மேற்கொள்வதிலும் நிதானம் தேவை.

ஐக்கிய இலங்கைக்குள்ளேயே மலையக மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட முடியும் என்பதனால்

ஐக்கிய இலங்கைக்குள் தேசிய சிறுபான்மை இனமாகவே கொள்ளப்படுவதே தற்போதைக்கு சரியாக இருக்க முடியும்.

மலையக மக்கள் ஒரு தனியான தேசிய இனமாக வளர்ந்து விட்டதாக கொள்வதை விட இன அடக்கு முறை காரணமாக அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்ற அடையாளத்தை வேண்டி நிற்கின்றனர். தேசிய இனமாக வளர வேண்டிய அவசியத்தை உணருகின்றனர். இது அவர்களது எதிர்கால இருப்பிற்கு அடிப்படையாகவும் அமைகின்றது.

அந்த வகையில் மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்ற அடையாளத்துடனேயே அவர்களுடைய சுயநிர்ணய உரிமையை நிலை நிறுத்துவதற்கான நீண்ட பயணத்தை ஆரம்பிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

இதன் அர்த்தம் அவர்களை ஒருபோதும் ஒரு தனியான தேசிய இனமாக கொள்ள முடியாது என்பதல்ல.

# V

# மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை

மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம்; அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது வேறுபட்ட சூழ் நிலைகளை கருத்திற்கொண்டு வித்தியாசமான அர்த்தப் படுத்தப்பட வேண்டும். மலையக மக்களின் இன உரிமை களை பாதுகாக்க அவர்கள் இன்று ஒரு தனி நாட்டையோ அல்லது ஒரு சமஷ்டியையே கோருவது சாத்தியமில்லை. இம்மக்கள் தொடர்ச்சியான ஒரு நிலப்பரப்பில் வாழாமையாலும் பெரும்பான்மை சிங்கள மக்களிடையே வாழும் சிறுபான்மை இனம் என்பதனாலும் சுயநிர்ணய உரிமை என்பது தனிநாடு அல்லது சமஷ்டி என்று தற்போது அர்த்தப்படுத்தப்படலாகாது.

ஓரினத்தின் சுயநிர்ணய உரிமை என்பது ஓரினம் அதனது சுயாட்சியை நிலைநிறுத்த இனரீதியாக தனியான நாடொன்றை அமைத்துக் கொள்வதாக அர்த்தம் கொள்ளப்பட்டு பிரயோகிக்கப்பட்டது.

அக்கருத்து பின்னர் மாற்றமடைந்து ஓரினம் அதனது சுயாட்சியை சமஷ்டி ஆட்சிமுறையின் கீழ் நிலைநிறுத்த முடியும் என்ற கருத்தாக வளர்ந்தது.

பிற்காலத்தில் பிரதேச சுயாட்சி, சுயாட்சி உள்ளமைப்பு, உப உள்ளமைப்பு என்பனவற்றினை அமைத்து இனங்களினது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட முடியும் என்று வளர்ச்சி கண்டுள்ளது.

எனவே சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து சென்று தனி நாடொன்றை அமைப்பதனை மட்டுமே குறிக்கும் என்பதாக அர்த்தப்படுத்தக் கூடாது.

அரசியல் பொருளாதார பௌதிக புவியியல் ரீதியாக மலையக மக்கள் மலையகத்தில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட முடியாதவர்கள் அதேபோன்று சிங்கள மக்களும் மலையக மக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட முடியாதவர்களாவர். எனவே இந்த இருசாராரும் பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ்வது மிகவும் முற்போக்கானது. இருசாராரிடமும் ஐக்கியம் யாரும் நினைப்பது போல் மேலோட்டமாக ஏற்பட்டுவிட முடியாது.

மலையகத்தில் மலையக மக்கள் சில இடங்களில் செறிவாக வாழ்ந்தாலும் மலையகத்திற்கு வெளியில் சிதறி வாழ்கின்றனர்; மோசமான இன ஒடுக்குமுறைக்கு ஆளாகின்றனர். இவர்களது பிரச்சினைக்கான தீர்வும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

எனவே மலையக மக்களின் உரிமைக் கோரிக்கைகளை உயர்த்திப் பிடிக்கின்ற அதே வேளை யதார்த்த நிலைமைகளை கருத்திற்கொண்டு தூரதிருஷ்டியுடன் நடைமுறைச் சாத்தியமான பிரயோகங்களைப் பற்றி கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஆரம்ப காலம் தொட்டே சிங்கள மக்களும் மலையக மக்களும் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடனேயே பார்க்கும் நிலை தொடர்ந்து வருகிறது. மலையக மக்களுடைய

உரிமை தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் மேற்படி நிலைமையை கூர்மையடையச் செய்வதாக இருக்கக்கூடாது.

மலையக மக்கள் ஒரு சமூகமாக வளர்ந்து சிங்கள மக்களுக்கு அழிவை ஏற்படுத்துவார்கள் என்ற கருத்து சிங்கள் மக்களிடம் ஊட்டப்பட்டுள்ளது. மறுபக்கம் சிங்கள மக்களுக்கு மத்தியில் தாம் ஒரு சமூகமாக வாழ முடியாது என்ற கருத்து மலையக மக்கள் மத்தியில் நிலவு கிறது. இந்தக் கருத்துக்களை அடிப்படையில் தகர்க் காமல் இரு தரப்பினரிடையேயும் ஐக்கியம் என்பது ஏற்படமுடியாது. இக்கருத்துக்களை தகர்ப்பது என்பதும் இலகுவான விடயமல்ல.

எனவேதான் தங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப் பட்டுள்ளது, என்ற உத்தரவாதம் மலையக மக்களின் மனதில் ஏற்பட வேண்டும். அதன் மூலமே பெரும்பான்மை சிங்கள மக்களால் தங்களுக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதை மலையக மக்களுக்கு உணர்த்தமுடியும். அதேவேளை மலையக மக்களின் உரிமைகள் எவை? அவை எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் வரையறை செய்யப்படுவதன் மூலமே அல்லது வெளிப்படையாகப் பிரகடனப் படுத்துவதன் மூலமே சிங்கள மக்கள் மனதில் மலையக மக்களுக்கு எதிராக பதிக்கப்பட்டுள்ள அபிப்பிராயத்தை மாற்ற முடியும். மேற்படி வரையறை செய்யப்படும் விடயங்களால் சிங்கள மக்களுக்குப் பாதிப்பு இல்லை என்பதை சிங்கள மக்களுக்கு உணர்த்த வேண்டும். சிங்கள மக்கள் மலையக மக்களையும் மலையக மக்கள் சிங்கள மக்களையும் பரஸ்பரம் அங்கீகரித்து வாழும் நிலைமையை ஏற்படுத்தி வளர்க்க வேண்டும்.

எந்தவித நடைமுறை வளர்ச்சிகளையும் வரலாற்றுத் தேவைகளையும் கருத்திற் கொள்ளாது சுயநிர்ணய உரிமை சமன் தனிநாடு என்பதனை நிரந்தர வாய்ப்பாடாக கொள்வது அறிவு பூர்வமானதாகாது.

மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம் அவர்களின் பிரச்சினைகள், சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும் என்பது மலையக மக்களுக்கென தனிநாடு கேட்பதாகாது. மலையகத்தில் புவியியல்ரீதியாக தொடர்ச்சியற்றும் மலையகத்திற்கு வெளியிலும் வடக்கு கிழக்கிலும் வாழும் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை ஒன்றிணைத்து ஒரு பிராந்தியசபை அமைப்பதால் மட்டும் முழு மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையையும் உறுதி செய்ய முடியாது.

மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்ய சுயாட்சி உள்ளமைப்புகள், உப உள்ளமைப்புகளை ஏற்படுத்தலாம். இந்த அடிப்படையில் புதிய ஜனநாயக கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் (இடது) என்ற பெயரில் இயங்கியபோது 1984இல் அதன் முதலாவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1991ஆம் ஆண்டு இரண்டாவது தேசிய மாநாட்டிலும் 1991இல் நடைபெற்ற புதிய – ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச மாநாட்டிலும் அத்தீர்மானம் விரிவாக்கப்பட்டது.

1991ஆம் ஆண்டில் நடைபெற்ற புதிய – ஜனநாயக கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டம் பின்வருமாறு.

தேசிய இனப்பிரச்சினைக்கான புதிய—ஜனநாயக கட்சியின் வேலைத்திட்டம்

1. இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தர மாக ஒன்றிணைக்கப்பட்டு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் முழு அதிகாரங்களும் கொண்ட பூரண பிரதேச சுயாட்சி அமைப்புமுறை உருவாக்கப்படல் வேண்டும்.

2. இத்தகைய பிரதேச சுயாட்சி அமைப்பினதும்—அதனோடு இணைந்த சுயாட்சி உள்ளமைப்புகளினதும் செயற்பாடுகளும் அதிகாரங்களும் அதேவேளை மத்திய அரசின் கடப்பாடுகளும், வரையறைகளும் அரசியல் சாசனரீதியில் தெளிவாக வரையறுக்கப்படல் வேண்டும்.

3. இப்பிரதேச சுயாட்சிப் பிரதேசத்தின் பொருளாதாரம், நிலப்பகிர்வு, நீர்ப்பயன்பாடு, வேலைவாய்ப்பு, பிரதேசப் பாதுகாப்பு, நிதி, நீதி நிர்வாகம், மொழி, கல்வி மற்றும் சமூக, கலாசார விடயங்கள் யாவும் எத்தகைய குறுக்கீடும், தலையீடும் இன்றி அப்பிரதேச மக்களாலேயே நிர்வகித்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

4. வடக்கு கிழக்கு இணைந்த இப்பிரதேசத்தில் முஸ்லீம் மக்கள் தகுந்த சுயாட்சி உள்ளமைப்புகள் மூலம் தமது தனித்துவத்தையும் சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சிகளை சுயநிர்ணயத்தின் அடிப்படையில் எவ்விதக் குறுக்கீடுகளும் அற்ற விதத்தில் முன்னெடுக்கக்கூடியவாறு வரையறை செய்தல் வேண்டும்.

5. மலையகத்தில் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவளி மக்கள் தமது இனத் தனித்துவங்களையும் தன்னடையாளங்களையும் பேணிப்பாதுகாத்து விருத்தி செய்யும் வகை

யிலான சுயநிர்ணய அடிப்படையிலான சுயாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும். அதன் வாயிலாக அவர்கள் நீண்டகாலமாகப் போராடிப் பெற்ற பிரஜாவுரிமை, வாக்குரிமை உட்பட அனைத்து உரிமை களையும், பூரணப்படுத்தவும் அதன் அடிப்படையில் நிலவுரிமை, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, கல்வி, வீடமைப்பு, சுகாதாரம், மற்றும் சமூக கலாசாரத் துறைகளிலான வளர்ச்சிக்கு முழுமையான வாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

6. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் தமிழ்பேசும் மக்களுக்கும் பிரதேச சுயாட்சியின் கீழ் வாழும் சிங்கள மக்களுக்கும் சாத்தியமான சுயாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்படுவதன் மூலம் அவர்களது உரிமைகளுக்கு பாதுகாப்பும் உத்தரவாதமும் வழங்க முடியும்.

7. தமிழர் சமூகத்தில் பன்நெடுங்காலமாக சாதி தீண்டாமையால் பாகுபாட்டிற்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகி சகல துறைகளிலும் பின்தங்கிய மக்களாக இருந்துவரும் தாழ்த்தப்பட்டமக்களின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் பிரதேச சுயாட்சியின் கீழ் வரையறுக்கப் பட்ட முன்னுரிமை வழங்கப்படவேண்டும். அத்துடன் எஞ்சியுள்ள சாதி-தீண்டாமைக் கொடுமைகளுக்கும் இவ் அமைப்பின் ஊடாக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

8, வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் பிரதேச சுயாட்சியின் கீழ் வரையறுக்கப்பட்ட முன்னுரிமைகளும் பாதுகாப்பும் வழங்கப்படுவதுடன் அவர்களின் அரசியல் சமூக பொருளாதார கலாசார வளர்ச்சிகளை உறுதிசெய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

25-12-1991 அன்று இராகலையில் நடைபெற்ற புதிய-ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேசத்திற்கான இரண்டாவது மாநாட்டில் மலையக மக்களின் இனப் பிரச்சினைக்கான வேலைத்திட்டம் பின்வருமாறு கூறுகிறது. (6) மலையக மக்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஒரு தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களது தனித்துவங்களும், தன்னடையாளங்களும் பாதுகாக்கப்படவேண்டும். அவர்களின் உரிமைகளை உறுதிசெய்யும் வகையில் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை இணைத்து ஒரு பலமான சுயாட்சி உள்ளமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும், இப்பிரதேசத்திற்கு வெளியிலும், வடக்கு கிழக்கிலும் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் வகையில் சுயாட்சி உப உள்ளமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

புதிய-ஜனநாயக கட்சியின் மேற்படி வேலைத் திட்டங்களை அவதானிக்கின்றபோது வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்ததாக ஒரு சுயாட்சிப் பிரதேசம் (Regional Autonomy) இலங்கை தமிழ் மக்களுக்கென அமையும். அதனுள் இருக்கும் முஸ்லீம் மக்களுக்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு சுயாட்சி உள்ளமைப்பு (Inner Autonomy) அமையும். ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு சுயாட்சி உப உள்ளமைப்புடன் (Autonomous Bodies) அமையும். வடக்கு கிழக்கில் வாழும் மலையக மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் உப உள்ளமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு சுயாட்சிப் பிரதேசத்தை விட நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒரு மாகாணம் தனியாகவோ ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டோ பல சுயாட்சிப் பிரதேசங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மலையக மக்கள் ஒரு மாகாணத்திலாவது பெரும் பான்மையாக வாழாதபடியால் மலையக மக்களுக்கென ஒரு சுயாட்சிப் பிரதேசம் அமைப்பது தற்போது சாத்திய மில்லை என்பதால் மத்திய, ஊவா, சப்பிரமுவ மாகாணங்களில் மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை இணைத்து ஒரு பலமான சுயாட்சி உள்ளமைப்பை ஏற்படுத்த வேண்டும். இந்த சுயாட்சி உள்ளமைப்பு பெரும்பான்மை சிங்கள மக்களின் ஒரு சுயாட்சிப் பிரதேசத்தினுள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சுயாட்சிப் பிரதேசங்களினுள் அமைக்கப்படலாம்.

மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் வாழும் மலையக மக்கள் பெரும்பான்மை இன சுயாட்சிப் பிரதேசத்தில் அங்கம் வகிப்பதுடன் அவர்களுக்கென தனியான சுயாட்சி உள்ளமைப்பு ஏற்படுத்தப்படும். அதன்மூலம் அவர்களின் இன உரிமைகளை பாதுகாக்க முடியும்,

அதேபோன்று ஏனைய பெரும்பான்மை இன சுயாட்சிப் பிரதேசத்தில் வாழும் மலையக மக்கள் அச்சுயாட்சிப் பிரதேசத்தில் அங்கம் வகிப்பதுடன் அவர்களுக்கென தனியான உப அமைப்புகள் அமைக்கப் படும். சுயாட்சி உப அமைப்புகள் கிராமத்திற்கும். நகரத்திற்கும் அல்லது மாவட்டத்திற்கும் ஒன்றென அமைக்கப்படும். குறிப்பாக ஒரு கிராமத்தில் அதிகமாக மலையக மக்கள் வாழின் ஒரு சுயாட்சி உப அமைப்பாக அமைக்கப்படும். அதேபோன்று செறிவாக வாழ்வதைப் பொறுத்து நகரங்களிலும், மாவட்டங்களிலும் சுயாட்சி உப அமைப்புகள் அமைக்கப்படும்.

சுயாட்சி உள்ளமைப்பு ஒரு சுயாட்சி பிரதேசத்தினுள் அமைவதன் காரணமாக அவை சுயாட்சி பிரதேச அமைப்பால் அடக்கப்பட மாட்டாது. சுயாட்சி பிரதேச

அமைப்பு, உள்ளமைப்பின் விவகாரங்களில் தலையிடாது. உள் அமைப்புகளில் வாழும் இன மக்களை இனரீதியாக அடக்குவதற்கு இடமளிக்காதவாறும் உள்ளமைப்பின் அதிகாரங்கள் அமையும்.

உப உள்ளமைப்புகளும் கூட அவ்வாறே சுதந்திரமாக இயங்க முடியும்.

மலையக மக்களுக்கென அமையும் சுயாட்சி உள்ளமைப்பின அதிகாரங்களை ஒரேடியாக வரையறுக்க முடியாது. ஆரம்பத்தில் ஆகக்குறைந்தது அப்பிர தேசத்தில் குடியேற்றம், அபிவிருத்தி, மக்களின் கல்வி, மொழி, மதம், கலாசாரம் போன்ற உரிமைகளை உத்தர வாதம், செய்வதாக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்

# VI

# மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் அரசியல் திசை மார்க்கமும்

முழு இலங்கைத் தேசியம் என்பது இதுவரை சிங்கள பௌத்த தேசியமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. அதனால் இலங்கைத் தேசியம் என்பதில் இலங்கை தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் என்போர் உள்ளடக்கப்படவில்லை.

பொருளாதார ரீதியில் முதலாளித்துவ அம்சங்கள் தவிர்க்க முடியாமல் அறிமுகம் செய்யப்பட்டு ஓரளவு வளர்ச்சி கண்டுள்ள போதிலும் அரசியல் தலைமைகள் சிங்கள பௌத்த நிலப் பிரபுத்துவ வர்க்கத் தன்மையையே கொண்டுள்ளன.

அதில் யூ. என். பியில் பெருமுதலாளித்துவ அம்சங்கள் மேலோங்கியிருப்பதால் மலையக மக்கள் தொடர்பாக யூ.என்.பியினது அணுகுமுறைகளினால் கடந்த 17 வருடங்களாக சில சலுகைகள் அவர்களுக்கு கிடைத்துள்ளன என்பது உண்மையே. அதில் மிகவும் குறிப்பிடத்தக்கது பிரசாவுரிமை வழங்கும் சட்டங்கள் ஆக்கப்பட்டதும். மலையகத்தில் பாடசாலைகளில் ஏற்படுத்தப்பட்ட சில மாற்றங்களினால் மலையக மக்களிடையே கல்வியில் ஏற்பட்டுள்ள நாட்டமும் குறிப்பிடத்தக்கன.

இது 1970-77 காலகட்டத்து சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சி காலத்தை விட முன்னேற்றகரமானது தான். எனினும் மலையக மக்கள் இனரீதியான அடக்கு முறைகளுக்கும் ஒடுக்கல்களுக்கும் 1977க்குப் பிற்பட்ட யூ.என்.பி காலத்தில் வித்தியாசமான வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டன என்பதை மறந்து விடலாகாது.

அதாவது கண்டிய-மலைநாட்டு பௌத்த சிங்கள தலைவர்களின் செல்வாக்கு கூடிய விடயங்களில் பாரிய அடக்கு முறைகளுக்கு முகம்கொடுத்த அதேவேளை கண்டிய பௌத்த சிங்கள சிந்தனைக்கு முக்கியத்துவம் குறைந்த விடயங்களில் சில சலுகைகள் மலையக மக்களுக்கு கிடைத்தன.

ஆனால் சுதந்திரக்கட்சியின் தலைமை இலங்கை தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அடையாளம் காணப்பட்ட போதும் சுதந்திரக்கட்சித் தலைமையிடம் சிங்கள பௌத்த கண்டிய-மலைநாட்டு நிலப்பிரபுத்துவ சிந்தனை மேலோங்கி இருப்பதையே காணமுடியும். ரத்வத்தை, கொப்பேகடுவை போன்ற கண்டிய நிலப்பிரபுத்துவ குடும்பங்கள் தாங்களே மலையக மண்ணின் மைந்தர்கள் என்பதை நிலைநாட்டுவதிலேயே அக்கறை கொண்டுள்ளன.

அந்த சிந்தனை மேலோங்கி காணப்படுவதாலும் மலையக மக்களை இந்நாட்டிற்கு வந்த அந்நியர்கள் என்றும் அவர்களின் வருகையே கண்டிய நிலபிரபுக்களின் (வளவுகாரர்கள்) நிலங்கள் பறிக்கப்பட்டமைக்கு காரணம் என்ற போக்கும் சுதந்திரக்கட்சியில் மேலோங்கியிருப்பதை மலையக மக்கள் முதலாளித்துவ வளர்ச்சியை கண்டிய சிங்களவர்களுக்கு எதிரானதாகவே கொள்ளும் போக்கே சுதந்திரக்கட்சியில் இருப்பதை அவதானிக்க முடியும்.

மேற்படி சிந்தனையின் அடிப்படையிலேயே சுதந்திரக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் மலையக மக்கள் நடத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது ஆட்சி செய்யும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கத்திலும் சுதந்திரக்கட்சி தலைமைப்பாத்திரம் வகிப்பதாலும் அதன் தலைமையிடம் ஸ்தாபிதமாயிருக்கும் கண்டிய சிங்கள பௌத்த நிலப்பிரபுத்துவ குணாம்சம் காரணமாகவும் மலையக மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணி அதன் தேர்தல் விஞ்ஞானபனத்தில் மலையக மக்களின் உரிமைகள் சிலவற்றை வழங்குவது பற்றி அளித்த வாக்குறுதி முற்போக்கானதே. எனினும் நடைமுறையில் சுதந்திரக் கட்சியின் கண்டிய பௌத்த சிங்கள நிலப்பிரபுத்துவ வர்க்க குணாம்சமே மேலோங்கியிருப்பதால் அந்த சில உரிமைகளாவது வழங்கப்படுமா என்பது ஐயமே.

யூ.என்.பி., சுதந்திரக்கட்சி என்பன முதலாளித்துவ கொள்கையை கொண்டு இருப்பதாலும் தொழிலாளர்கள் கூடிய மலையக மக்களுக்கு சார்பாக அவை ஆட்சி நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. அந்த இரண்டு கட்சிகளும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்ட கட்சிகளுமல்ல என்பதாலும் மலையக மக்களுக்கு அக்கட்சிகளின் ஆட்சியின் கீழ் பூரண விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது அரசியல் தூர திருஷ்டியற்றதாகும்.

அந்த இரண்டு கட்சிகளுக்கும் மாறாக அவற்றின் இடத்தில் ஆகக்குறைந்தது நீதியான சமத்துவமான சமுதாயத்தை ஏற்படுத்தும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் முற்போக்கான கட்சிகள் இல்லாதபடியால், அவற்றின் இடத்தில் அதாவது தேசம் தழுவிய முற்போக்கான மாற்றம் ஏற்படுவதற்கு உடனடியாக சாத்தியம் இல்லை.

மனித சமூக விடுதலை போராட்டத்தில் இனம், மதம் மொழி, நாடு, சாதி, பிரதேசம், நிறம் என்பன யாவும் இறுதியில் அர்த்தமற்றவை என்பதில் எவ்வித அபிப்பிராய பேதமும் இருக்க முடியாது. மேற்படி பேதங்களை ஒழிக்கும் பாதை மாக்சியம் காட்டும் வர்க்கப் போராட்டப்பாதையே; அவற்றை ஒழித்து விடுதலை அடைந்த மனித சமூகத்தை கம்யூனிஸ அமைப்பிலேயே பார்க்க முடியும்.

ஆனால் அந்த பேதங்களற்ற சமூகத்தை படைக்க வர்க்கப் போராட்டப் பாதையில் மக்கள் அணிதிரள முதலாளித்துவம் தடையாக இருக்கிறது. சோவியத் யூனியன் உட்பட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நிக்கரகுவாவிலும் சோஷலிஸ அரசுகள் சிதைக்கப்பட்டதும் அவற்றின் சிதைவுக்குப் பிறகு அந்நாடுகளில் நிலவும் தேசிய இனப் பிரச்சினைகளும், இன அழிப்பு நடவடிக்கைகளும் நல்ல உதாரணங்களாகும்.

சீனா, கியூபா போன்ற நாடுகளில் சோஷலிஸ அரசுகளை இல்லாமல் செய்ய முதலாளித்துவம் மேற்கொண்டு வரும் முயற்சிகளும் தெரிந்த விடயங்களே.

சோஷலிஸ நாடுகளில் தேசிய இனங்களுக்கு பூரண விடுதலை கிடைத்து விட்டன என்று கூற முடியாவிட்டாலும் அநாகரிகமான இனப்படுகொலைகளும், இன ஒடுக்கலும், அடக்குமுறைகளும் இருக்கவில்லை. இன முரண்பாடுகள் கூர்மையாக இல்லை. சோஷலிஸ நாடுகளில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் பூரண விடுதலை நோக்கிய பயணத்தில் சோஷலிஸ அரசுகள் வீழ்த்தப்பட்டவுடன் அந்நாடுகளில் நிலவும் இனரீதியான பிரச்சினைகள் சோஷலிஸ ஆட்சிக் காலத்தை விட மிகவும் மோசமான சிக்கலாக இருக்கின்றன.

ஆக, வர்க்கமற்ற சமூகம் நோக்கிய பாதையே இன முரண்பாடுகளை ஒழிக்கும் பாதையாகும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் தேசிய இனங்களுக்கு உரிமைகள் பூரணமாக நிலை நாட்டப்பட முடியாது.

முதலாளித்துவம் அதனுடைய அரசியல் வாழ்வை நீடிப்பதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக இனம், மதம், மொழி, சாதி, பிரதேசம், நிறம் போன்ற குறுகிய பேதங்களை பயன்படுத்தி மனித சமுதாய ஒற்றுமையை குலைத்து விடுதலையை தடுக்கும் யுக்திகளை செய்து வருவது காணக் கூடியதே. அடக்குமுறைகள் மிகவும் மோசமான இராணுவ நடவடிக்கைகளாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. அடக்குமுறைகளுக்கு எதிரான சரியான போராட்டங்களை முறியடிப்பதற்கு முதலாளித்துவம் அதனாலான சகல அடக்குமுறைகளையும் மேற்கொண்டு வருகின்றது. அது மட்டுமல்ல, அவ்வகையான போராட்டங்களை மழுங்கடிக்க அல்லது பலவீனப்படுத்த சகல நவீன யுக்திகளையும் கையாள்கிறது.

எந்தவொரு போராட்டமும் மக்கள் போராட்டமாக முன்னெடுக்கப்படாதிருக்க அல்லது மக்களின் ஒரு பிரிவினரான மத்திய தர வர்க்க அல்லது இளைஞர்களின் போராட்டமாக இருக்க முதலாளித்துவம் சூழ்நிலைகளை திட்டமிட்டு ஏற்படுத்துகிறது. ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்படும் அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் அச்சமூகத்தின் ஒரு பிரிவினரின் அக்கறையை மட்டும் அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட முதலாளித்துவம் வேண்டிய அணுகுமுறைகளை செய்து விடுகிறது. விடுதலை இயக்கங்கள் மக்களிலிருந்து அந்நியப்படவும் இயக்கங்களில் மக்களுக்கு எதிரான போக்கு மேலோங்கவும் இயக்கங்களில் ஊடுருவியும் விடுதலைப் போராட்டங்களை முதலாளித்துவம் பலவீனப்படுத்துகின்றது. இவ்வாறான

நடவடிக்கைகளையெல்லாம் மீறி ஒரு விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைகின்ற போது குறித்த பிரச்சினைக்குத் தீர்வாக குறிப்பிட்ட சமூகத்தின் ஒரு பிரிவினரை மட்டும் திருப்திப்படுத்தும் தீர்வுகள் காணப்படுவதும் உண்டு.

அதைவிட ஒரு மக்கள் போராட்டத்துக்கான சூழ்நிலை ஏற்படுமுன்னரே ஒரு நாட்டில் ஒரு சமூகத்தில் போராட்டத்தை இயற்கையாக திணித்து விடுவதனால் அவை, காலத்துக்கு முந்திய போராட்ட நடவடிக்கையாக அமைந்து மக்கள் போராட்டமாக வளர்வதற்கு இடமில்லாமல் தோல்வியடைய செய்யப்படுகின்றது.

இவ்வாறு முதலாளித்துவம் செயற்படும் போது அவற்றை கணக்கில் எடுக்காது வெறும் போக்கில் மட்டும் கம்யூனிஸத்தைப் பேசிக் கொண்டு பாராளுமன்றச் சந்தர்ப்பவாத அரசியலையே இலக்காகக் கொண்டு செயற்படும் ஸ்தாபனங்களையும், பாராளுமன்ற அரசியலையே முற்றாக நிராகரித்த நடைமுறையில் எவ்வித சரியான அரசியல் வேலைகளையும் முன்னெடுக்காமல் தத்துவங்களை மட்டும் பேசிக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்களையும் விமர்சன ரீதியாக பார்க்க வேண்டியதும் அவசியமாகும்.

தேசிய இடதுசாரிக்கட்சிகள் எனப்பட்ட சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பன தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் செய்த அரசியல் வேலைகள் குறைவானவை அல்ல. அக்கட்சிகள் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தினுள் மூழ்கியதாலும் 1970-77 வரை இருந்து அக்கட்சிகளும் இணைந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாலும் அக்காலக் கட்டங்களில் தொழிலாளர்களை அணி திரட்டி போராட்டங்களை நடத்துவதை கைவிட்டு

அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுத்ததாலும் மலையக மக்கள் அக்கட்சிகளில் நம்பிக்கை இழந்தனர்.

மேலும் அக்கட்சிகள் பாராளுமன்றத்தில் கூடிய ஆசனங்களைப் பெறவேண்டியதிலேயே கூடிய அக்கறை செலுத்தியபடியால் இலங்கையில் சோஷலிஸத்தை ஏற்படுத்தப் போவதாக கூறிக் கொண்டு இலங்கையிலுள்ள பல இனச் சமூகங்களிடையேயும் நிலவும் அடக்கு முறைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடைமுறை அரசியலை விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ, தெரியாமலோ கைவிட்டதால் அடக்கப்படும் மக்களிடம் செல்வாக்கிழந்தன.

ஜே. வி. பி.யியை பொறுத்தவரை அது பரந்துபட்ட மக்கள் இயக்கமாக முன்னெடுக்கப்படாமல் இலங்கையில் சோஷலிஸ ஆட்சியை ஏற்படுத்துவதற்கான போராட்டம் எனக் கூறிக் கொண்டு தனிமைப்பட்டதுடன்சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காது அவர்களின் போராட்டங்களுடன் தங்களது தேசியப் போராட்டம் எனப்பட்டதுடன் இணைக்காமல் விட்டதால் மிக இலகுவாக மக்களிடையே அவ்வியக்கம் இல்லாமல் போனது. மலையக மக்களை அந்நியர்களாக கொள்ளும் போக்கே அவர்களிடமும் செல்வாக்கு செலுத்தியது.

மக்களின் அடக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்தில் இரண்டு அணுகுமுறைகளை கடைபிடிக்க வேண்டியது அவசியம்.

ஒன்று மக்களை அடக்குவதும் சுரண்டுவதும் யார் என்பதும், இரண்டு, மக்கள் எவ்வகையில் அடக்கப்படுகிறார்கள் என்பதுமாகும். மக்கள் இனரீதியாகவும் சாதி, மத, பிரதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும்

அடக்கப்படும்போதும் சுரண்டப்படும் போதும அவவகை அடக்கு முறைகளுக்கு எதிராக ஸ்தாபனப்பட்டுப் போராடுபவர்கள் அவர்களது போராட்டத்தினை ஏனைய அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங் களுடன் இணைக்க வேண்டியதும் அவசியம். அத்துடன் நீண்டகாலத்தில் நிரந்தரமாக இன, மத, சாதி, நிற பிரதேச பேதங்களுக்கு முடிவுகட்டி போராட்டப்பாதை யிலும் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது இனப்பிரச்சினையை முழு இலங்கை தேசிய விடுதலையுடன் இணைக்கத் தவறிய இடதுசாரிக்கட்சி களின் தவறுகளிலிருந்தும், தேசிய விடுதலைப் போராட் டத்துடன் இனவிடுதலைப் போராட்டத்தை இணைக்கத் தவறிய வடக்கு கிழக்கு இயக்கங்களின் பின்னடைவுகளி லிருந்தும் மலையக மக்கள் பாடம் படிக்கத் தவறக்கூடாது.

மலையக மக்கள் போராட்டத்தை இனத்தேசியவாத மாக வளர்த்து அதனை ஒரு தனிப்பட்ட போராட்டமாக முன்னெடுக்க வேண்டும் என்ற கொள்கை இறுதியில் தோல்வியையே தழுவும். ஏனெனில் இனத்தேசியவாதம் சிதறிவாழும் மலையக மக்களுக்கு ஒரு இடைக்காலத் தீர்வைக் கூடத் தராது. பேரின அடக்குமுறைகளுக்கு எதிராக சரியான முற்போக்கு இயக்கங்கள் வளராத விடத்து தவிர்க்க முடியாதவாறு இனத்தேசிய வாத அமைப்புகள் தோற்றம் பெறுகின்றன. ஆனால் அவை இனத்தேசியவாதத்தையே முற்றுமுழுதான இலக்காக கொண்டிருப்பதால் அவை அடிப்படையில் இனபேதமற்ற சமூகத்தை படைப்பதற்கு பங்களிப்பை செய்ய முடியாதன.

இனத்தேசியவாத கொள்கை மட்டுமே அல்லது இனத்தேசிய வாதத்தை அடிப்படையாக கொள்ளும்

அமைப்பு மட்டுமே இன விடுதலையை ஈட்டித்தரும் என்பதும் பிழையான கருத்தே.

இனவாதத்திற்கு எதிரான, நீண்ட காலத்தில் இனபேதங்களை ஒழிக்க நோக்கம் கொண்டுள்ள கொள்கையால் அல்லது அமைப்பால் இடைக்காலத் தீர்வுக்கும் நீண்டகால தீர்வுக்குமான போராட்டங்களை முன்னெடுக்க முடியும். இப்பாதை மிகவும் கடினமான தெனினும் மிகவும் முற்போக்கானதே.

ஒரு ஒடுக்கப்படும் இன மக்களுக்கான அல்லது அவ்வின மக்களை மட்டும் கொண்டிருக்கும் அமைப்பு இனத்தேசியவாதத்தை அடிப்படையாக கொண்டிருந்தால் மட்டுமே இனவிடுதலைக்காக உண்மையாக போராட முடியும் என்பது சரியான கருத்தன்று. மாக்சீய கொள்கையை அடிப்படையாகக் கொண்டும் இனவிடு தலைக்காக போராட முடியும்.

அதேபோன்று மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடும் ஒரு இயக்கம் அல்லது அந்த இனத்துக்கான அல்லது அந்த மக்களை மட்டும் கொண்டிருக்கும் அமைப்பு இனத்தேசிய வாத அமைப்பாக மட்டுமே இருக்கமுடியும் என்பதும் சரியான கருத்தன்று.

தேசியவாதம் பேரின அடக்குமுறை, தேசிய அடக்குமுறைக்கு எதிராக முற்போக்கானதாக இருந் தாலும் மாக்சியத்தின் அளவிற்கு இனவிடுதலையில் தேசியவாதம் புரட்சிகரமானதாக இருக்க முடியாது.

மலையக மக்களுடைய இன ஒடுக்குமுறைக்கு எதிராக போராட்டத்தை தேசிய இடதுசாரி கட்சிகள் முன் னெடுக்கவில்லை என்பதால் மலையக மக்களுக்கென தனி யான அமைப்புகள் தோன்றவேண்டியதாயிற்று. ஆனால்

அதற்காக மலையக மக்களுக்கான தனியான அமைப்பு களால் மட்டுமே மலையக மக்களின் இனவிடுதலையை நிலைநாட்டமுடியும் என்றோ அவ்வமைப்புகள் மலை யக தேசியவாதம் என்ற கொள்கையை மட்டும் அடிப் படையாக கொண்டிருக்கவேண்டும் என்றோ விடாப்பிடி யாக இருப்பது சரியன்று. அடுத்து தேசியவாதம் என்பது வேறு மாக்சியம் என்பது வேறு. தேசியவாதத்தை முன் னெடுப்பதில் மாக்சிய அணுகுமுறை என்று கூறிக் கொண்டு மாக்சியம் கூறும் அடக்குமுறைக்கெதிரான போராட்டம், பலாத்காரம் என்பவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு மாக்சியம் கூறும் வெகுஜன பங்களிப்பு, வர்க்கப்பார்வை என்பவற்றை புறக்கணிப்பது உண்மை யான மாக்சிய அணுகுமுறையல்ல. வர்க்கப் பார்வையும் வெகுஜன பங்களிப்புமில்லாத போராட்டம் மாக்சிய போராட்டமாக அமையாது. ஆனால் அதை நோக்கி வளரமுடியும்.

எனவேதான் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டு மென்பதால் இவை தேசிய விடுதலைப் போராட் டத்தை கைவிடவேண்டும் என்றோ, முழு இலங்கை தேசிய விடுதலைப் போராட்டத்தை கைவிடவேண்டும் என்றோ, அர்த்தம் கற்பிக்கலாகாது.

தமிழ் பேசும் தேசிய சிறுபான்மை இனமாக இருக்கும். மலையக மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதனை நோக்கி அம் மக்கள் மீதான இன ஒடுக்கலுக்கு எதிராக சக்திமிக்க மக்கள் இயக்கமொன்றை கட்டி வளர்க்க வேண்டும். மலையக மக்களின் பிரச்சினைகள் முழு தேச மக்களுக்கும் சரியாக எடுத்துரைக்கப்பட்டு சிங்கள, தமிழ் முஸ்லீம்

மக்களுடனும் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். மலையக மக்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என்றும் அவர்களின் போராட்டம் சிங்கள மக்களை அவர்கள் வாழும் பகுதிகளிலிருந்து விரட்டியடிப்பதாகும் என்றும் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் பிரசாரத்தை முறியடிக்க வேண்டும்.

தேசியரீதியான சகல மக்களையும் உள்ளடக்காது பிரேதசரீதியாக, ஒரு பகுதி மக்களிடம் மட்டும் இயங்கும் அமைப்பொன்று மாக்சிய அடிப்படையில் இயங்க முடியாது என்பதும் தேசியவாத அடிப்படையிலேயே இயங்கவேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தன்று.

ஆக, முழு இலங்கை தேசியரீதியான அமைப்பினால் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தை முன்னெடுக்கமுடியாது என்றோ, மலையக மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் மலையக மக்களுக்கான தனியான அமைப்பாக மட்டும் இருக்கவேண்டும் என்றோ அவ்வமைப்பு தேசியவாதத்தை அடிபபடையாக கொண்டதாகவே அமைய வேண்டும் என்றோ நிரந்தர வரையறை போடமுடியாது ஒரு போராட்டத்திற்கான அமைப்பின் தோற்றம், வளர்ச்சி, கொள்கை என்பன அப்போராட்டத்தின் வரலாற்றுத் தேவையுடனும் சாதக பாதக சூழ்நிலையுடனும் தொடர்புடையதாகும்.

மலையக மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க உறுதியான சரியான ஸ்தாபன மொன்று தேவையாகும். அந்த ஸ்தாபனம் நீண்டகால நோக்கில் தொழிலாளர் வர்க்க அரசியலை கொண்ட முழு மக்களையும் அணிதிரட்டக்கூடிய அல்லது முழு மக்களையும், எல்லா மலையக மக்கள் அமைப்புகளையும் இணைக்கக்கூடிய முழு மக்களின் நலனிலும் அக்கறை கொண்டதாக இருக்கவேண்டும்.

தொழிற்சங்க அமைப்புகளால் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் மலையக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது. நூற்றுக்கணக்கான தொழிற் சங்கங்களை உருவாக்குவதால் மட்டும் தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைத்துவிடப் போவதில்லை. மலையக மக்களுக்கென அரசியல் இயக்கமொன்றைக் கட்டி வளர்க்க வேண்டும் என்பதால் தொழிற்சங்கங்களில் அரசியல் பிரிவுகளை ஏற்படுத்தி பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு வெல்லுவதால் மட்டும் மலையக மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியாது. மத்தியில் அமையும் அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு பேரம் பேசும் அரசியலை நடாத்துவதாலும் மலையக மக்களுக்கு விடுதலை கிட்டாது இ. தொ, கா. வினால் மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை என்பது பேரம் பேசும் அரசியலுக்கு கிடைத்த தோல்வியாகக் கொள்ள வேண்டும்.

ஒரு பிரிவினரை மட்டும் கொண்ட குறுகிய பார்வையை கொண்ட பிரதேசவாத, இனவாத அரசியலும் மலையக மக்களுக்கு விடிவை தரப்போவதில்லை. மலையக மக்களுக்கென தனியாகத் தோன்றிய அமைப்புகள் பல செயலிழந்ததை மலையக மக்கள் வரலாற்றை படிக்கும் போது அறிந்து தெளியலாம்.

தற்போது மலையக இன தேசியவாத கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாக கூறிக் கொண்டு அரசாங்கத்துடன் பேரம்பேசி பிரச்சினைகளை தீர்க்க முற்படும் சில சக்திகளுக்கு நடைமுறையில் ஏற்பட்டு வரும் தோல்விகளும், பின்னடைவுகளும் அச்சக்திகளின் அரசியல் கொள்கைக்கு (இருந்தால்) ஏற்படும் தோல்வியாக கொள்ளல் வேண்டும் அச்சக்திகள் அவற்றின் அரசியற்கொள்கை நடைமுறை என்பவற்றை றுபரிசீலனை செய்ய வேண்டும்.

மக்கள் சம்பந்தப்படாத குறிப்பிட்ட சிலரின் அதிதீவிரவாத நடவடிக்கைகளும் ஆக்கத்தையன்றி அழிவையே மீதமாக்கும் என்பது தெளிவு. வடக்கு கிழக்கு தமிழ் தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புபட்டு மலையகத்தில் இயங்கிய இளைஞர்களுக்கும் ஏற்பட்ட தோல்வியும் மலையகத்திற்கென தனியான தீவிரவாத இயக்கங்களை அமைத்து கிடைத்த தோல்வியும் சிறந்த படிப்பினைகளாக கொள்ளப்படவேண்டும்.

இன்று மலையக மக்களிடையே தொழிலாளர் வர்க்கத்தைவிட தோன்றி வளர்ந்து வரும் புதிய சில வர்க்கங்களில் தாக்கம் பங்களிப்பு பற்றியும் சரியாக மதிப்பிட்டு எல்லா மக்கட் பிரிவினரையும் ஐக்கியப் படுத்தி விடுதலையை நோக்கி முன்னேறும் அமைப் பொன்றை கட்டி வளர்க்க வேண்டும்.

தொழிற்சங்கரீதியாக பல கூறுகளாக்கப்பட்டுள்ள மலையக மக்களை எல்லோரையும் இணைக்கக்கூடிய, இருக்கும் தொழிற்சங்கங்கள் அமைப்புகளிடையே ஐக்கிய புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறான அமைப்பொன்றின் மூலமே மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை சரியான திசைமார்க்கத்தில் கொண்டு செல்ல முடியும்.

# VII

# மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் ஸ்தாபனங்களும்

மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கின்ற சரியானதொரு ஸ்தாபனம் இன்னும் வளர்ச்சியடையவில்லை என்றே கூற வேண்டும்.

1948இற்கு முன்பும், பின்பும் இலங்கை—இந்தியன் காங்கிரஸ் இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தும் சாத்வீக வழிகளிலான போராட்டங்களையும் முன்னெடுத்தது. இ. தொ. காங்கிரஸூம் அதனுடைய எல்லைக்குட்பட்டு (செய்ய வேண்டிய பணிகள் அனைத்தையும் செய்யாவிடினும்) இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் ஸ்தாபனமாக இருந்து வருகிறது. அவ்வமைப்பின் பிரத்தியேக முயற்சிகளே முக்கிய தாக்கமாக இல்லாவிடினும் 1977இற்கு பிறகு அது யூ.என்.பி. அரசாங்கத்துடன் கூட்டாக இருந்த காலத்தில் நாடற்றவர்களுக்கு பிரசாவுரிமை வழங்கும் சட்டங்கள் இயற்றப்பட்டதும், மலையகத்தில் பல பாடசாலைகள் அமைக்கப்பட்டதும் உள்ளூராட்சி சபை தேர்தல்களில் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும். அடக்கப்படும் தொழிலாளர்கள் உட்பட சகல மலையக மக்களின் உரிமைகளுக்கு நேர்மையாகவும் சரியாகவும் அரசியலை முன்னெடுக்க இ.தொ கா.வால் முடியவில்லை. இ.தொ.கா.வில் பெரும்பான்மையாக தொழிலாளர்கள் அங்கம் வகித்தபோதும் அது அடிப்படையில் ஒரு தொழிலாளர் வர்க்க அமைப்பாக இல்லாமல் உயர்வர்க்க அமைப்பாக இருப்பதால்

தோட்டத் தொழிலாளர்களுக்காக போராடும் இயக்கமாகவன்றி யூ.என்.பி.யின் உயர்வாழ்விற்கு உதவும் ஒரு அமைப்பாகவே பெரிதும் இயங்கியது. தற்போது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்திருப்பதற்கு காரணம் இ.தொ. கா வினை பாதுகாப்பதேயன்றி மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கன்று. மேலும் இ.தொ.கா. அடிப்படையில் தொழிற்சங்கமாகவே இயங்குவதாலும் உயர்வர்க்க தன்மை கொண்டதனாலும் மலையக மக்களின் முழு அரசியல் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் அமைப்பாக வரலாற்றை அதனால் முன்னெடுக்க முடியாது.

அதிலும் மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கொண்டிருந்தபோதும் இ.தொ.கா. மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க கோரி இயங்குவதாக இல்லை.

சுருங்கக் கூறின் மலையக மக்களுக்கென பிரத்தியேகமான அதிகாரப் பரவலாக்கல் கோருவதாககூட இல்லை.

மலையக மக்கள் மீது இன ஒடுக்கல் மேற்கொள்ளப் படுவதை எதிர்த்து அரசியல் ஸ்தாபனத்தை கட்டிவளர்க்காமல், சகல மலையக அமைப்புகளையும் ஐக்கியப்படுத்தி பேரினவாதத்திற்கு எதிராகப் போராடாமல் அரசாங்கத்தை பகைத்துக் கொண்டால் நிலைமை மோசமாகிவிடும் என்ற போர்வையில் யூ.என் பி அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டது.

மலையகத்தின் சக்தி வாய்ந்த அமைப்பான இ.தொ.கா வின் இத்தகைய போக்கால் மலையக மக்களின் பாரம்பரிய வெகுஜனப் போராட்டப் பாதை மழுங்கடிக்கப்பட்டது. எதனையும் அரசாங்கத்துடன் பேசித் தீர்க்க முடியும் என்ற பேரப்பேச்சு அரசியலே இ.தொ.கா.வின் உயிர்நாடியானது. அதனால் மலையக

மக்கள் மேலும், மேலும் மோசமான வாழ்நிலைக்கே தள்ளப்பட்டனர்.

இதைவிட மலையகத்திலிருக்கும் ஏனைய சில தொழிற் சங்கங்கள் தொண்டமானுக்கும் இ.தொ.காவிற்கும் எதிரான தொழிற்சங்கமாக இயங்குவதில் அக்கறை காட்டினவேயன்றி மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க உறுதியான அரசியல் பாதையில் முன்னேறு வதை கடமையாக கொள்ளத்தவறின. இதனால் பலவிதத்திலும் மக்கள் மத்தியில் வெறுப்பை பெற்றிருந்த போதும் இ தொ.கா.வே மலையக மக்களின் அமைப்பாக இருக்கின்றது.

சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பன மலையக மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டி அவர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண்பதை விட்டு தொழிற்சங்க வேலை களுக்கே முக்கியத்துவம் கொடுத்தன. மலையக மக்கள் மீதான இன ஒடுக்கலை எதிர்த்து மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தை முன்னெடுக்கா விடினும் இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டங் களைக் கூட முன்னெடுக்கத் தவறின

செங்கொடிச் சங்கம், புதிய செங்கொடிச் சங்கம் என்பன தோட்டத் தொழிலாளர்களை புரட்சிகரப் பாதையில் அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுத்த போதும் மலையக மக்களுக்கு மீதான இன ஒடுக்கலுக்கு எதிராக சரியான அரசியல் பாதையை காட்டத் தவறின. அவை இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டத்தை இனவாதமாக கருதினவோ தெரியாது. மலையக மக்களை ஒரு தேசிய சிறுபான்மை இனமாக ஏற்று இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கத் தவறின. மாக்சியத்தினை ஏற்றுக்கொண்ட அச்சங்கங்கள் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது வித்தி

ரசமான அனுகுமுறையை கொண்டது என்பதனை ஏற்கவில்லை. பாரம்பரிய சுயநிர்ணய உரிமை கோட்பாட்டையே எவ்வித வளர்ச்சியையும் இணைக்காது ஏற்றுக்கொள்வதால் சுயநிர்ணய உரிமை என்பது தனிநாடாகப் பிரிந்து போகும் உரிமை என்பதை மட்டுமே குறிக்கும் என்பதையே முடிந்த முடிபாக கொண்டதனால் அந்த அடிப்படையிலேயே மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்க அச்சங்கங்கள் பின் நிற்பதாக தெரிகிறது. மேலும் மலையக மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதை விட்டு பாரம்பரிய தொழிற்சங்க வேலையையே அவர்கள் முன்னெடுத்தனர்- முன்னெடுக்கின்றனர்.

வடக்கு கிழக்கு ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையில் இந்திய வம்சாவளியினரின் பிரசாவுரிமை பறிக்கப்பட்ட போது ஜீ ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பிரசாவுரிமையை பறித்த யூ.என்.பி. அரசாங்கத்திற்கு சார்பான நிலைப்பாட்டையே எடுத்ததால் மலையக மக்கள் மத்தியில் வரலாற்றில் என்றுமே மாறாத எதிர்ப்பை சம்பாதித்தது.

தமிழரசு கட்சியினரும், பின்னர் அமைக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும் மலையக மக்கள் மீது அனுதாபம் கொண்டிருந்த போதும் அவற்றின் உயர்சாதி உயர்வர்க்க நிலைப்பாடு காரணமாக மலையக மக்களின் மீதான இன ஒடுக்கலுக்கு எதிரான அரசியலை அவர்களால் முன்னெடுக்கமுடியவில்லை என்பதுடன் சகல தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் அவர்களால் முன்னெடுக்க முடியவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்வைத்த தமிழீழ கோரிக்கையில் மலையக மக்களின் நலன் பாதுகாக்கப்படக் கூடியதாக இருக்கவில்லை.

வடக்கு கிழக்கு தமிழ் தீவிரவாத இயக்கங்களாலும் மலையக தேசிய இன உணர்வை

சரியான முறையில் வளர்த்து வழிநடத்த முடியவில்லை. வடக்கு கிழக்கு போராட்டங்களில் அவர்கள் விட்ட தவறுகளாலும், மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் வடக்கு கிழக்கு தமிழர்களின் போராட்டத்திலிருந்து வித்தியாசமானது என்பதை அவை கணக்கில் எடுக்கத் தவறியமையாலும் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அவர்களால் சரியாக வழிநடத்த முடிவில்லை.

இந்த இயக்கங்கள் மலையகத்தையும் தமிழீழத்தின் ஒரு பகுதியாக கொண்டன. வடக்கு கிழக்கு பிரதேசம் அம்மக்களின் வாழ்நிலை வளர்ச்சி என்பனவற்றின் அடிப்படையில் மலையக மக்களின் தேசிய இனப்பிரச்சினையை அணுகின. அவற்றின் சில அமைப்புகள் மயையகத்திற்கென தனியாக தீவிரவாத இயக்கங்களை அமைத்தன. தனியான இயக்கங்கள் அமைக்கப்பட்டபோதும், அவையும் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது வடக்கு கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையிலிருந்து வேறுபட்டது என்பதை சரியாக விளங்கிச் செயற்படவில்லை. அவை மலையக மக்களிடம் ஆதரவையும் பெறவில்லை. அவ்வியக்கங்கள் மலையகத்தில் இயங்கின என்பதை அரசாங்க புலனாய்வு அறிக்கைகளிலிருந்தே தெரிந்து கொள்ள முடிந்தது.

மலையக மக்கள் மீதான இன அடக்குமுறைகளுக்கு எதிராக சரியான அரசியல் மார்க்கத்தை தேசிய ரீதியான பாராளுமன்றவாத இடதுசாரிகட்சிகள் முன்வைக்க தவறின. இந்நிலைமையில் மலையகம் மலையகத்தவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்று மலையக படித்த இளைஞர்கள் தொண்டமானுக்கு எதிராக அணிதிரள வேண்டுமென்ற விருப்பத்தைக் கொண்டவர்கள் மலையக இளைஞர் முன்னணி என்ற அமைப்பை 70களின் ஆரம்பத்தில் ஆர். சிவலிங்கம் தலைமையில் ஆரம்பித்தனர். இது நடைமுறையில் மலை

யகத்திலிருந்து தொழில் புரிந்த யாழ்ப்பாண ஆசிரியர், அதிபர்களின் இடத்தை பிடிப்பதாக அமைந்தது. அவ் அக்கறையை அரசியல் இயக்கமொன்றை கட்டி வளர்ப்பதில் காட்டவில்லை. இதனால் இது நாளடைவில் செயலிழந்து போனது.

இக்காலகட்டத்தில் மலையக தேசிய இனப்பிரச்சினையை ஒரு கருத்தியலாக கொண்டு எல்.சாந்தகுமார் தலைமையில் மலையக மக்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கம் மலையக மக்களை தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இயங்கியது. இது மலையக புத்திஜீவிகளின் மத்தியில் வரவேற்பை பெற்றாலும் அதனுடைய நடைமுறை வேலைகள் மிகவும் வரையறுக்கப்பட்டதாக (கருத்தரங்குகள்) மட்டும் இருந்தபடியாலும் மலையக மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்த தெளிவான அரசியல் நடவடிக்கைகள் முன்வைக்கவில்லை. அதனால் அதுவும் மலையக மக்களின் அரசியல் இய்க்கமாக வளரமுடியவில்லை. 1983 இனக்கலவரத்துடன் பெரும்பாலும் செயலிழந்தது எனலாம்.

1989ஆம் ஆண்டில் பெ. சந்திரசேகரன் தலைமையில் மலையக மக்கள் முன்னணி ஆரம்பிக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் இ. தொ. கா. பட்டியலில் பெ.சந்திரசேகரன் போடப்படாததால் பெ.சந்திரசேகரனும் அவரது ஆதரவாளர்களும் அதிருப்தியடைந்து புளொட் இயக்கத்தின் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பட்டியலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டனர். வெற்றி கிட்டவில்லை. அதற்கு பிறகு தனியான அமைப்பாக இயங்குவதற்காக மலையக மக்கள் முன்னணியை அமைத்தனர்.

அவர்கள் ஒரு தொழிற்சங்கத்தையும் அமைத்து செயற்பட்டனர். காலப்போக்கில் மலையகத்தில் பிரதேச

சபை தேர்தலில் போட்டியிட்டு சில ஆசனங்களையும் பின்னர் 1993இல் மத்திய மாகாணசபையில் ஒரு ஆசனத்தையும், 1994ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தையும் பெற்றனர். (சுயேட்சையாக போட்டியிட்டனர்) நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட்டு பெ. சந்திரசேகரன் வெற்றி பெற்றதுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க உதவினார். இவ் அரசாங்கத்தின் பிரதி அமைச்சராகவும் இருக்கின்றார். மலையக மக்கள் முன்னணி தற்போது அரசியற் கட்சியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் பழைய இடதுசாரி கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் தலைமைப் பாத்திரம் வகித்த போதும் மலையக தேசியவாத அமைப்பாக மலையக மக்கள் முன்னணி தன்னைக்காட்டி கொள்கிறது. மலையக மக்களுக்கென தனியான பிராந்தியசபை மலையகத்தில் அமைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. மலையக மக்களின் மீதான இனஒடுக்கலுக்கு எதிராக மலையக தேசியவாதத்தை அரசியற் கோட்பாடாக ம. ம, முன்னணி கொண்டுள்ளதாக அடையாளம் காட்டிக் கொள்கிறது. வெளிப்படையாக கூறாவிடினும்)

இப்போக்கும் கூட வடக்கு கிழக்கு தீவிரவாத அல்லது மிதவாத அமைப்புகளின் வடக்கு கிழக்கு தமிழ் தேசியவாதத்தின் நேரடிப் பாதிப்புக்கு உட்பட்டதாக கொள்ள முடியும்.

இவர்களின் (ம. ம. மு.) நடைமுறையை அவதானிக்கின்ற போது இ. தொ. கா. விற்கு பதிலான ஒரு பலமான தொழிற்சங்கமாக தங்களது சங்கம் மலையகத்தில் வளர வேண்டும் என்ற எண்ணத்தாலும் ஏனைய மலையக அமைப்புகளை ஐக்கியப்படுத்தி அல்லது அவற்றுடன்

ஐக்கியப்பட்டு மலையக மக்களின் இன உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க விரும்பாத ஐக்கிய முன்னணி தந்திரோபாயத்தை முற்றாக (பல அமைப்புகள் இருக்கும்போது பொது கோரிக்கையின் அடிப்படையில் ஐக்கியப்படுவதே முற்போக்கானதும், வரவேற்கத் தக்கதும்) நிராகரிக்கும் தொழிற்சங்கப் போட்டியில் இறங்கியுள்ளதாலும் தாமே முதன்மையாக வரவேண்டும் என்பதில் அக்கறை செலுத்துகின்றனர் என்பதை உணர முடியும். இது மலையக மக்களை மேலும் பிளவுபடுத்தும் நடவடிக்கையாகவே அமையும்.

பொது ஜனஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்ததுடன் பேரம் பேசும் அரசியலையும் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிகிறது. கொட்டகலை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரிக்கு 100 வீதம் மலையக மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் என கோரிக்கை விடுத்து, ஏற்கனவே மாணவர்களுக்கு இருந்த 50 வீத அனுமதியையும் இழக்கும் விதத்திலான 75 25வீத அனுமதியை ஏற்றுக் கொண்டமை (முன்னர் மலையக மாணவர்களுக்கு 50 வீதமென இருந்தது. தற்போது முழு தமிழ் பிரிவிற்கும் 75 வீதமாக்கப்பட்டுள்ளது. இதனால் மலையகத்தவர்களுக்கிருந்த 50 வீதத்தை ஏனைய தமிழ் பேசும் மாணவர்கள் பங்கிட்டுக் கொள்ள நேரிடும்) இவர்களது பேரம் பேசும் அரசியலின் தோல்வியை ஆரம்பத்திலேயே வெளிப்பட்டு விட்டது. மலையக மக்களுக்கென வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற பிரதியமைச்சர் சந்திரசேகரத்தின் வாக்குறுதி இன்றும் பரீட்சார்த்தமாகக் கூட மேற்கொள்ளப்படவில்லை. இது மலையக மக்களை மேலும் நம்பிக்கையற்றவர்களாக்கும். இவர்கள் மலையகத்திலுள்ள மக்களைப் பற்றி மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். ஆக புதிய வார்த்தைகளை மட்டும் முன் வைப்பதன்றி முற்று முழுதான புதிய தலைமைத்துவம் மலையகத்திற்கு தேவைப்படுகிறது. மலையக

உரிமைப் போராட்டத்தை மாக்சிய அடிப்படையில் முன்னெடுக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இந்த மாக்சிச லெனினிஸ்டுகள் புதிய – ஜனநாயக கட்சியின் அணிதிரண்டு மலையகத்திற்கு பொறுப்பாக மலையகப் பிரதேச கமிட்டியை அமைத்து செயற்படு கின்றனர். இப்பிரதேசக் கமிட்டி ஒரு தேசிய கட்சியான புதிய - ஜனநாயக கட்சியின் ஸ்தாபனமாக இயங்குகின்ற அதேவேளை மலையகத்தவரை கொண்ட, மலையக மக்களின் மத்தியிலான முழு அரசியல் வேலைகளுக்கும் பொறுப்பாக இயங்குகிறது.

1991ஆம் ஆண்டு புதிய ஜனநாயகக்கட்சி என்ற பெயர் மாற்றம் செய்யப்படும்வரை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்று 1978இலிருந்து இயங்கியது. மறைந்த தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. தோழர் சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை. ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம், பாட்டாளிவர்க்க அமைப்புகளின் கடந்த கால வரலாற்றை விமரிசன ரீதிபாகப் பார்த்து, சரியான கொள்கையையும், நடைமுறையையும் கொண்ட, சகல மக்களையும், அமைப்புகளையும் ஐக்கியப்படுத்திச் செயற்படக் கூடிய, மலையக அமைப்பொன்று அவசியமானதாகிறது.

அவ்வாறான ஸ்தாபனம் ஒன்றின் மூலமே மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும். அவ்வாறான ஸ்தாபனத்தினாலேயே நீண்ட கால நோக்கில் வர்க்கப் போராட்டத்தின் தேவையை இந்நாட்டின் முழு மக்களின் தேவையை, விடுதலையை முதன்மைப்படுத்தி முன்னேற முடியும். வலதுசாரி, இடது

சாரி பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலை நிராகரித்து குறுகிய பிரதேச் இனவாத அரசியலை நிராகரித்து தொழிற்சங்க போட்டி நடவடிக்கைகளை தவிர்த்து வர்க்க நிலைப்பாட்டுடன் இலங்கை தேசிய நீரோட்டத்தில் கலக்க முடியும். தொழிலாளர்கள், இளைஞர்கள் போன்ற சமூகத்தின் பலதரப்பட்டோரையும் இணைத்து பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை கட்டி வளர்க்க முடியும்.

அந்நோக்கங்களையும், இலக்குகளையும் கொண்ட ஸ்தாபனமொன்றின் மூலமே இலங்கை தேசிய அரசியற் நீரோட்டத்தில் இணையும் மலையக மக்கள் அவர்களது தனித்துவத்தை விட்டுக் கொடுக்காது பேணக்கூடிய உறுதிப்பாட்டை கொண்டிருக்க முடியும்.

மேற்படி தேவைகளை மனதில் கொண்டு பாராளுமன்ற இடதுசாரிகளினதும், தத்துவங்களை மட்டும் பேசிக் கொண்டிருந்த இடதுசாரிகளினதும் வரலாற்றை விமரிசனரீதியாக தொகுத்து மலையகத்திலும் மக்கள் இயக்கமொன்றை கட்டி வளர்க்கும் பணியில் உண்மையான மாக்சிய லெனினிஷ்ட்டுகள் 1978 முதல் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் மலையக மக்களின் சுயநிர்ணய சர்வதேசியம் என்பவற்றின் அடிப்படையில் முரண்பட்டுக் கொண்டு வெளியேறியவர்களாலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஆரம்பிக்கப்பட்டது.

அக்கால கட்டத்தில் மலையகத்தில் தோழர்கள் தம்பையா, சி. இராஜேந்திரன் போன்றோரின் தலைமையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யின் வெகுஜன வேலைகள் கட்சியின் வாலிபர் இயக்கமான இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டன. தற்போது அது இலங்கை ஜனநாயக வாலிபர் இயக்கம் என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் மலையக மக்களின் பிரசாரவுரிமைப் பிரச்சினைக்கான தீர்வு வேண்டியும், தோட்டக்

காணிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களை தடுத்து நிறுத்தவும், மலையக மக்களின் வீடு, காணி, கல்வி போன்ற ஜீவாதார பிரச்சினைகளை தீர்க்கும்படியும் மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன. 1979 - 83 காலத்தில் தலவாக்கொல்லை, பூண்டுலோயா, நோர்வூட் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருந்த திட்டமிட்ட குடியேற்றங்கள், மலையக மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படவிருந்த நீர்த் தேக்க யோசனைகளுக்கு எதிராக இயக்கங்கள் நடத்தப் பட்டன. மேற்படி திட்டங்கள் பின்னர் கைவிடப் பட்டதும் தெரிந்ததே.

இன்று மலையக தேசியவாதம் பற்றி ஓங்கிக் கதைப்பவர்கள் கூட தொண்டமானின் தலைமையை ஏற்றுக்கொண்டு செயற்பட்ட காலத்தில் பல்வேறு தொழிற்சங்கங்களிலும் அங்கம் வகிக்கும் தொழிலாளர் களை பொதுவான ஒரு அரசியல் ஸ்தாபனத்தில் இணைக்கும் முயற்சியில் இலங்கை தேசபக்த வாலிபர் இயக்க தோழர்கள் வெற்றிகண்டனர். தொழிற் சங்க அமைப்பிற்கு அப்பால் அரசியல் இயக்கமொன்றை மலையகத்தில் கட்டி வளர்க்க முடியும் என்பதை நிருபித்தனர். அவர்களின் அரசியல் வேலை மலையக இளைஞர்களாலும், புத்திஜீவிகளாலும் பெரிதும் ஆகர்சிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் பயணத்தில் பல்வேறுபட்ட அடக்கு முறைகள், தடைகள் காணப்பட்ட போதும் அவற்றை மீறி முன்னேறுகின்றனர். மலையகத்தில் பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை கட்டி வளர்க்கும் பணியில் அவர்கள் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர்.

இவர்கள் மலையக மக்களின் மீதான பேரின ஒடுக் கலுக்கு எதிராக மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் முன்னெடுக்க வேண்டும் என்றும் மலையக

மக்கள் வாழும் பிரதேசங்கள் போன்ற விஷேட சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் வித்தியாசமாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனும் நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

மலையக தேசிய இனப்போராட்டமானது குறுகிய இனவாதமாகவோ ஏனைய இனச்சமூகங்களுக்கு எதிரானதாகவோ முன்னெடுத்துச் செல்லப்படாமல் அல்லது தனிப்பட அப்போராட்டம் மலையக மக்களின் ஒரு பிரிவினருக்குரியதாக்கப்படாமல், முழு மலையக மக்களின் போராட்டமாக வளர்த்தெடுக்கப்படுவதுடன் இலங்கையின் ஏனைய அடக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுடன், முழு தேசிய விடுதலைப் போராட்டத்துடனும் இணைக்கப்பட ளேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

மலையக மக்களின் மீதான் இன ஒடுக்கலுக்கு எதிரான் போராட்டம் மலையக தேசியவாதம் என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மலையக மக்கள் முன்னணி செயற்படுவதாக கொள்ளப்படுகிறது.

அத்துடன் மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் மாக்சிய அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் புதிய – ஜனநாயக கட்சி செயற்படுகிறது.

ஆக, இன்று மலையக இனவிடுதலைப் போராட்டத்தை மேற்படி இரண்டு விதமான போக்குகள் இருப்பதையே அவதானிக்க முடிகிறது.

□

இலங்கையில் வாழும் எல்லா சமூகங்களையும் விட மிகவும் பின்தங்கிய நிலைமையிலேயே மலையக மக்கள் வாழ்கின்றனர். மலையக மக்கள் மீதான பேரினவாத அடக்குமுறைகள் அவற்றுக்கு எதிரான அம்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் போன்றன பற்றி எடுத்துரைக்கும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது இந்நூல். ஒரு வித்தியாச மான, புதியதொரு அணுகுமுறையைக் கையாள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. மலையக மக்களின் அரசியல் பரிணாமத்தை சரியாக விளங்கிக் கொள்ள உதவிடுகிறது.